விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 16 சனிக்கிழமை (30.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

# ஞானசார தேரருடன் ரணில் பேச்சுவார்த்தை

## சதிமுயற்சி என பொது பல சேனா சாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஆட்சியை தன்வசப்படுத்தும் நோக்கத்துடன் விளக்கமறியலில் உள்ள ஞானசார தேரரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக பொது பல சேனா அமைப்பின் பேச்சாளர் டிலாந்த விதானகே ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## உ / த பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

2016-ம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் 29-ம் திகதி வரை மாணவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## பிரிட்டன் நாசகாரி கொழும்பு வருகை

(கொழும்பு)

பிரித்தானிய கடற்படையின் நாசகாரி போர்க்கப்பல் ஒன்று நேற்று கொழும்புத் துறை முகத்துக்கு வந்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் பிரித்தானியப் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு வந்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் எச்.எம்.எஸ்.டிபென்டர் என்ற இந்த நாசகாரி 24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணையை பசில் தவிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் சொத்துக் கொள்வனவின போது ஏற்பட்ட மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. 24ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்ட வரைபு நாளை வெளியீடு

## முதலமைச்சர் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபை தமிழ்மக்கள் முன்னிலையில், சம்பிரதாய பூர்வமாக வெளியிடும் நிகழ்வு நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில்,

பெருந் தொகையான மக்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்திலேயே இந்நிகழ்வு இடம்பெறும் என பேரவையின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளதுடன்,

தமிழ் இனத்துக்கான அரசியல் தீர்வு குறித்த முன்வரைபு வெளியிடப்படும் இந் நிகழ்வில் பொதுமக்கள், ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் 23ஆம் பக்கம் பார்க்க....

# இராணுவத்தினருக்கு எதிரான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் பரப்புரை

## சனல் 4 ஐ சாடுகிறார் விமல்



(கொழும்பு)

நாட்டின் இராணுவம் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை பரப்பி, தமிழ் மக்கள் மத்தியில் வைராக்கியத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை சனல் 4 ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளர் ஜோன் ஸ்னோவ் மேற்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டையில் அமைந்துள்ள முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு தொடர்ந்து 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த - மைத்திரி திடீர் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை மாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை திடீரென சந்தித்துள்ளார்.

கோட்டே ஸ்ரீ சாமகிறி தர்ம மகா சபையினால் கோட்டே ரஜ மகா விகாரையில் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றிலேயே இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டுள்ளனர்.

மேற்படி பௌத்த மத அனுட்டான நிகழ்வில் இருவரும் பூஜையின் முக்கிய நிகழ்வுகளை இணைந்து ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (செ-12)

## ஆணைக்குழு முன் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரிய நிதி மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் பிரசன்னமாகியுள்ளார்.



சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த விசாரணைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி நேற்று ஆணைக்குழுவின் எதிரில் பிரசன்னமாகியுள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் படுகாயமுற்ற குடும்பப் பெண் மரணம்

(பூநகரி)

பூநகரி - முழங்காவில் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இரவு இடம்பெற்ற விபத்தில் படுகாய முற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஆறு பிள்ளைகளின் தாய் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.

சாவகச்சேரி கட்டுக்காணியைச் சேர்ந்தவரான வசந்தகுமார் திருவதனா 24ஆம் பக்கம் பார்க்க....

## அரச, தனியார் பேருந்து சாரதி, நடத்துநர் கைகலப்பு

### ஒருவர் காயம், பயணிகள் அந்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து சாரதி, நடத்துனருக்கும் மற்றும் தனியார் பேருந்து சாரதி, நடத்துனருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் இரு பேருந்துகளிலும் பயணித்த சுமார் 25 ற்கும் மேற்பட்ட பயணிகள் தொடர்ந்தும் பயணம் செய்ய முடியாது தவித்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் கொடிகாமம் சந்திப் பகுதியில் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. மாதவேதனமாக ரூபா 27000/- வழங்கப்படும். இலவச தங்குமிடவசதியும் உண்டு.

எமது யாழ்ப்பாணக் கிளைக்கும் வேலை ஆட்கள் தேவை. மாதவேதனமாக ரூபா 12000/- வழங்கப்படும்.

(ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்) வயது 18 தொடக்கம் 25 வரை

தொடர்பு:- கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3857

(3439)

## கோழி இறைச்சி விற்பனை



உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் (கல்பேட்) சுகாதாரமான முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 6.00 தொடக்கம் மாலை 8.00 வரை நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3434)


# மரண அறிவித்தல்

## திருமதி கமலேஸ்வரன் சிவமங்களம்



நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரன் சிவமங்களம் நேற்று (29.01.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களாகிய வேலாயுதம் விசாலாட்சியின் அன்பு மகளும், அமரர்களாகிய சின்னத்துரை நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும், கமலேஸ்வரனின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரன் ( Virthusa pvt Ltd ), பானுகோபன் (கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிறீமதி (கொமர்ஷல் வங்கி, வெள்ளவத்தை), நேசராஜினி (வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுஷா, லிதுஷா, சர்லிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரர் சண்முகலிங்கம், விஜயலட்சுமி, பரமகுரு, திருஞான சம்பந்தர், கமலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் அமரர் கமலாம்பிகை, நடராசா, கமலாதேவி, வசுமதி யோகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.00 மணியளவில் பருத்தித்துறை கோவிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15, எல்லை ஒழுங்கை,
நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல் :-
கணவர்
சி.கமலேஸ்வரன்
0773690568

(3436)

## சாதனைக்கு முயன்றவர் வைத்தியசாலையில்

GUINNESS WORLD RECORDS

(கொழும்பு)

கின்னஸ் உலக சாதனை படைக்க முயற்சித்த துறைமுக உத்தியோகத்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்குளி டிலாசல் மஹாபொல நிலையத்திற்கு அருகாமையில் நேற்று இந்த சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர் 1.5 தொன் எடையைக் கொண்ட வாகனங்களை உடலின் மீது ஏற்றி இறக்கி சாதனை படைக்கும் முயற்சியை மேற்கொண்டிருந்தார்.

சில காரணங்களுக்காக வாகனத்தை உடலின் மீது நிறுத்த வேண்டாம் என சாதனை முயற்சியாளர் குறிப்பிட்ட போதிலும் வாகனம் உடலில் ஏற்றப்பட்டுள்ளது.

இதனால் சுகவீனமுற்ற குறித்த சாதனை முயற்சியாளர் வைத்தியசாலைக்கு சிகிச்சை க்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (செ-12)


## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலை செய்வதற்கு ஆண் அல்லது தோட்டத்திலும் வீட்டு வேலை செய்வதற்கு பெண் தேவை.

தங்குமிட வசதியுண்டு

0771681697
0773530996

(C-3587)


# சேவை நலன் பாராட்டு விழா



## எமது கல்லூரியின் முதல்வர்

## திரு சவிரி பூலோகராஜா

BA(Hons), P.G.D.E, M.Ed.

பூவொன்று சொன்னகதை
பூத்திருக்கு என்மனதில்
பூலோகத்தின் ராஜாவாம் - நீவீர் எம்
பள்ளியின் ரோஜாவாம்
பக்கத்தில் வந்து
பட்டென்று சொன்னது சரிதான்
பாடத்துடன் பண்பாட்டையும் ஊட்டினாய்
பாவலனே நீவீர் ரோஜாமட்டுமல்ல
பாரெங்கும் படிப்பின் ராஜாவாயும்
பல படி உயர வாழ்த்துகிறோம்...

காலம்-30.01.2016(இன்று)
நேரம்-பி.ப-1.00 மணி
இடம்-கல்லூரி வளாகம்

தங்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக்குழு கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

(C-3596)

# அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து

# மக்கள் கருத்தறியும் அமர்வுகள் யாழில் பெப்ரவரியில் நடைபெறும்

(கொழும்பு)

**அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை கேட்டறியும் குழுவின் அமர்வுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ் . மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது எனவும் இந்த அமர்வில் அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்கள் தமது கருத்துக்களை பதிவு செய்து கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக 20 உறுப்பினர்களை கொண்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவொன்று அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளது.



அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களை பெறுவது இக் குழுவின் பணியாகும். அதன் பின்னர் அந்த சமர்ப்பணங்கள் மீதான அறிக்கையொன்றையும் அதன் சிபாரிசுகளையும் இக் குழு தயாரித்து அவற்றை அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச்சரவை உப குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். எனவே இந்த அமாவுகளில் பொதுமக்கள் பங்குபற்றுவதோடு தங்கள் யோசனைகளை இந்தக் குழுவுக்குச் தெரிவிக்க அழைக்கப்படுகின்றனர்.

வாய்மூல யோசனைகளை செய்யும் போது தமது யோசனைகளின் சாராம்சத்துடன் கூடிய எழுத்து மூலமான பிரதியையும் வழங்குவது விரும்பத்தக்கதாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 243 7676 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும 011 232 8780 என்ற தொலைநகல் ஊடாகவும், constitutionalreforms@gmail.com என்ற மின் அஞ்சல் ஊடாகவும், yourconstitution.lk எனும் வலைத்தளத்தினூடாகவும், தவிசாளர், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு செயலகம், விசும்பாய, ஸ்ரேபிள்ஸ் வீதி, கொழும்பு 02 எனும் முகவரி ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஒரே தண்டவாளத்தில் இரு விரைவு ரயில்கள்

(கொழும்பு)

காலி, கிங்தொட்டை ரயில் நிலையம் அருகே நேற்று காலை நடைபெறவிருந்த பாரிய ரயில் விபத்தொன்று சாரதிகளின் திறமை காரணமாக மயிரிழையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

மாத்தறையிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ரஜரட்டை ரெஜிண புகையிரதம் வந்து கொண்டிருந்த அதே ரயில் தண்டவாளத்தில் கண்டியிலிருந்து மாத்தறைக்கு சென்று கொண்டிருந்த ரயிலையும் செலுத்துமாறு சமிஞ்சை வழங்கபபட்டுள்ளது.

எனினும் கண்டி-மாத்தறை ரயில் சில மீற்றர் தூரம் முன்னால் நகர்ந்திருந்த நிலையில் அதே தண்டவாளத்தின் எதிர்த்திசையில் ரஜரட்டை ரெஜிண ரயில் வருவதை புகையிரத கடவை காவலர் அவதானித்துள்ளார். உடனடியாக அவர் மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலை நிறுத்துமாறு அறிவிக்கும் வகையில் சிவப்புக் கொடியை அசைத்தவாறு தனது உயிரைப் பணயம் வைத்து தண்டவாளத்தில் முன்னோக்கிஓடியுள்ளார்.

எனினும் வேகமெடுத்திருந்த ரயிலை ஒரேயடியாக நிறுத்துவதற்கு அதன் சாரதி கடுமையாக பிரயத்தனப்பட வேண்டி நேரிட்டுள்ளது.

பாரிய விபத்தை தடுப்பதற்கு சமயோசிதத்துடன் செயற்பட்ட ரஜரட்டை ரயிலின் சாரதி பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான போராட்டத்தின் கடைசியில் கடும் அழுத்தம் காரணமாக ஏற்பட்ட இரத்தக் கொதிப்பில் மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து அவரை புகையிரதப் பயணிகள் முன்வந்து உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இரண்டு ரயில்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்த நிலையில் ஒரே தண்டவாளத்தில் இரண்டு ரயில்களையும் செலுத்த சிக்னல் வழங்கப்பட்ட சம்பவம் புகையிரதத் திணைக்களத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்ள உயர் அதிகாரிகள் குழுவொன்று காலிக்கு விரைந்துள்ளது. அத்துடன் சம்பவத்தின் போது அசண்டையீனமாக செயற்பட்ட புகையிரத உதவி சாரதிகள் உள்ளிட்ட சிலர் உடனடியாக பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மறுபுறத்தில் கிங்தொட்டை ரயில் நிலையத்தின் அருகே உள்ள பியதிகம மேம்பாலத்தில் நின்றிருந்த பொதுமக்களின் கூச்சல் மற்றும் சைகைகள் கண்டு ஆபத்தொன்றை உணர்ந்து ரஜரட்டை ரெஜிண ரயிலின் சாரதி புகையிரதத்தை உடனடியாக நிறுத்தியதுடன், மாத்தறை ரயில் வருவதைக் கண்டு தனது ரயிலை பின்னோக்கி நகர்த்தியுள்ளார்.

இதன் காரணமாக பாரியதொரு ரயில் விபத்து மயிரிழையில் தவிர்க்கப்பட்டுள்ளது. மாத்தறை ரயிலின் சாரதி ரயிலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதனை நிறுத்தும்போது இரண்டு ரயில்களுக்கும் இடையில் ஓரிரு அடிகளே இடைவெளி இருந்துள்ளது. (இ)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சிறுப்பிட்டியைச் சேர்ந்த அப்புக்குட்டி இராசதுரை (வயது-54 ) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்றுக்காலை 8.30 மணியளவில் இவரது வீட்டுக்கு சென்ற மாதாந்த மின்சாரப்பட்டியலை கணக்கிடும் மின்சார நிலைய ஊழியர் ஒருவர் சடலத்தை கவனித்துள்ளார்.

இது தொடர்பாக அவ் ஊழியரால் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதன்பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. (இ-5-30)

## தாயும் மகளும் விபத்தில் பலி; தாய்க்கும் மகனுக்கும் பிணை

தெமட்டகொடை பகுதியில் மஞ்சள் கடவையில் பாதை மாறிக்கொண்டிருந்த தாயையும் மகளையும் காரில் வேகமாக வந்து மோதி உயிரிழக்க செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 வயதுடைய சிறுவன் மற்றும் சிறுவனின் தாய் ஆகியோரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட தரப்பான கொல்லப்பட்ட பெண்ணின் மூத்த மகளுக்கு 2 இலட்சம் ரூபா கருணைக் கொடை வழங்கவும் நீதிமன்றம் சந்தேக நபர்களுக்கு உத்தரவிட்டது.

குறித்த விபத்தின் போது காரை செலுத்தியதாக கூறப்படும் 15 வயதுடைய மொஹமட் ஷரீப் மொஹமட் பாரூக் மற்றும் அவருக்கு காரை செலுத்துவதற்கு அனுமதித்து காரின் திறப்பை வழங்கிய அவரது தாயாரான 35 வயதுடைய சகீலா பானு மொஹமட் சலீம் ஆகியோருக்கே கொழும்பு மேலதிக நீதவான் (போக்குவரத்து) சந்தன கலல் சூரிய இவ்வாறு பிணையில் செல்ல நேற்று முன்தினம் அனுமதி வழங்கினார்.

தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணை களிலும் இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமையன்று இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பிலான வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் (போக்குவரத்து) சந்தன கலல் சூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது விஷேட அடை யாள அணிவகுப்பும் இடம்பெற்றது அடையாள அணி வகுப்பின் போது சாட்சியாளர்கள் இருவர் 15 வயதான சிறுவனையும் அவன் தாயையும் அடையாளம் காட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்இன்றுகாலை 9 மணிக்கு யாழ மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இணைத்தலைவர்களாக வடமாகாண முதலமைச்சர்சிவிவிக்னேஸ்வரன். சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த வாரம் நடைபெற்று நிறைவடைந்த நிலையில் இறுதியாக இன்று யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. (இ-9)

### தம்பி தாக்கியதில் அண்ணனுக்கு காயம்

குடும்பத்தகராறு காரணமாக தம்பியால் தாக்கப்பட்ட அண்ணன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சண்டிலிப்பாயில் இடம்பெற்றது. செல்வராஜா - ஜெயராசா (வயது 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபருக்கும் அவரது தம்பிக்குமிடையில் நேற்றைய தினம் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

வாக்குவாதத்தில் கோபமடைந்த தம்பி அண்ணனை கொட்டன் கொண்டு தாக்கியுள்ளார். தாக்குதலுக்குட்பட்ட அக்குடும்பஸ்தர் தலையில் படுகாயமடைந்த நிலையில் மயங்கி விழுந்துள்ளார். மயக்கமடைந்தவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (இ-5-30)

## பாடசாலை சீருடை வவுச்சர் செல்லுபடியாகும் திகதி நீடிப்பு

(கொழும்பு)


2016.01.31 ஆம் திகதியுடன் செல்லுபடியற்றதாக இருந்த பாடசாலை மாணவர்களின் சீருடை வவுச்சர் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வவுச்சர்களுக்காக பணம் வழங்கும் வங்கிகளுக்கு இது தொடர்பில் அறிவித்தல் விடுத்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைக்கான வவுச்சர் வழங்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள அதேவேளை அதற்காக சீருடை பெற்றுக் கொள்ள முடியுமான காலம் இம்மாதம் 31ஆம் திகதி வரையில் காணப்பட்டது.

எவ்வாறாயினும் குறித்த காலத்திற்குள் தமக்கான சீருடைகளை பெற்றுக் கொள்ள முடியாது போன மாணவர்களின் நலன் கருதி அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (இ)

# 50 ல் ஆஸியிடம் வாங்கியதை 20 ல் திருப்பி கொடுத்தது இந்தியா



ரோகித் சர்மா மற்றும் விராட் ஹோலியின் அதிரடியால் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் வெற்றி பெற்று இந்திய அணி இருபது-20 தொடரை கைப்பற்றி 50 ஓவர்கள் கொண்ட தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு பழிவாங்கியுள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது - 20 போட்டி மெல்பேர்னில் நேற்று நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து இந்தியாவின் ரோகித் சர்மாவும், தவானும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினாரகள். தவான் தனது அதிரடியை காட்ட மறுமுனையில் ரோகித் சர்மாவோ நிதானமாக ஆடினார்.

தனது முதல் ஓட்டத்தையே 9-வது பந்தில் தான் எடுத்தார். இந்நிலையில் சிறப்பாக ஆடி வந்த தவான் 42 ஓட்டங்களில் மக்ஸ்வெல் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து ரோகித் சர்மாவுடன் ஹோலி கூட்டு சேர்ந்தார். இவர்கள் இருவரும் அதிரடியாக ஆடினர். இந்நிலையில் 47 பந்துகளில் 5 பவுண்டரி, 2 சிக்சர்களுடன் 60 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரோகித் சர்மா ஆட்டம் இழந்தார்.

பின்னர் யுவராஜ் சிங் களமிறங்குவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த நிலையில் அணித்தலைவர் தோனி களமிறங்கினார். 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவரும் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஹோலி சிறப்பாக ஆடி அரை சதமடித்தார். இறுதியில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்கள் எடுத்தது. ஹோலி 59 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பின்னர் 185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா களமிறங்கியது. தொடக்க வீரர்களான ஃபின்ச் மற்றும ஷோன் மார்ஷ் களமிறங்கினர். இவர்கள் இருவரும் அதிரடியாக ஆடினார்கள். இதனால் அவுஸ்திரேலியாவின் கை ஓங்கியது. இந்நிலையில் 10-வது ஓவரை வீசிய அஸ்வின் மார்ஷை 23 ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்தார்.





பின்னர் வந்த கிரிஸ் லின் மற்றும் மக்ஸ்வெல் ஆகியோர் முறையே 2 மற்றும் ஒரு ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். விக்கெட்டுகள் ஒரு பக்கம் விழுந்துவந்தாலும் பின்ச் நிலைத்து நின்று ஆடினார். அவருக்கு சிறிது நேரம் துணையாக இருந்த வோட்சன் ஜடேஜாவின் பந்துவீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் பின்ஞ்சும் 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் இந்தியாவின் வெற்றி உறுதியானது.

இறுதியில் 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்களை மட்டுமே அவுஸ்திரேலிய அணி எடுத்தது. இதனால் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இந்தியத் தரப்பில் பும்ரா, ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை எடுத்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் ஹோலி தெரிவானார். இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது இருபது - 20 போட்டி நாளை 31 சிட்னியில் திகதி நடை பெறவுள்ளது. (க)

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சானியா- ஹிங்கிஸ் ஜோடி சம்பியன்





அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் சானியா மிர்சா-மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம், இந்த ஜோடி ஹாட்ரிக் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்று அசத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய ஓபனில் தொடக்கம் முதலே வெற்றிகளை குவித்து ரசிகர்களை உற்சாகப்படுத்திய நம்பர்-1 ஜோடியான சானியா மிர்சா- மார்ட்டினா ஹிங்கிஸ், நேற்று மகளிர் இரட்டையர் இறுதிப் போட்டியில் 7-ம் தரநிலை ஜோடியான அண்ட்ரியா ஹிலவாகோவா-லூசி ஹிராடெக்கா (செக்குடியரசின்) ஜோடியை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் 7-6 (7-1), 6-3 என்ற செட்கணக்கில் சானியா ஜோடி வெற்றி பெற்றது.

இதன்மூலம் அடுத்தடுத்து மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை இவர்கள் வென்றுள்ளனர். இதற்கு முன் கடந்த ஆண்டு விம்பிள்டன், அமெரிக்க ஓபனில் பட்டம் வென்றனர்.

இந்த தொடர் வெற்றிகளால் மிகுந்த உற்சாகமடைந்துள்ள சானியா மிர்சா, தனது ஜோடி மார்ட்டினா ஹிங்கிசை வெகுவாகப் பாராட்டி நன்றி தெரிவித்தார். இருவரும் இணைந்து கடந்த ஆண்டு சிறப்பாக விளையாடியதாகவும், தற்போதும் அதேபோன்ற ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதாகவும் கூறினார். மார்ட்டினா ஒரு அற்புதமான வீராங்கனை, அவருடன் விளையாடுவது அற்புதமானது என்றும் சானியா குறிப்பிட்டார். (க)

## ஹோலியின் பாக். ரசிகருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை



இந்திய தேசியக் கொடியை தனது வீட்டில் பறக்கவிட்ட பாகிஸ்தான் ரசிகருக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த உமர் ட்ராஸ் என்பவர், இந்திய கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் விராட் ஹோலியின் தீவிர ரசிகர்.

கடந்த 26-ம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த இருபது-20 போட்டியை பார்த்து உற்சாகமடைந்த உமர் தனது வீட்டின் மேல் இந்திய தேசியக் கொடியை பறக்க விட்டார்.

இதனைபார்த்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கவே, அவர்கள் உமர் ட்ராஸை கைது செய்தனர்.

மேலும் அவர் மீது பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல் என்ற அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட உமருக்கு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க)

## பெப் 24-ல் ஆரம்பிக்கிறது ஆசியக் கிண்ண கிரிக்கெட்

13ஆவது ஆசியக் கிண்ணப் போட்டிகள், எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி, இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளன. இப்போட்டிகள், பங்களாதேஷில் இடம்பெறவுள்ளதோடு, நடபபுச் சம்பியனாக இலங்கை காணப்படுகிறது.

தகுதிகாண் போட்டிகள், பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், இப்போட்டிகளில் ஆப்கானிஸ்தான், ஓமான், ஹொங் கொங், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் மோதவுள்ளன. வழக்கமான ஆசியக் கிண்ணப் போட்டிகள் 50 ஓவர்கள் கொண்ட தொடராக அமையும் நிலையில், இம்முறை போட்டிகள் இருபது-20 சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடராக அமையவுள்ளது.

**போட்டி அட்டவணை:** பெப். 24: இந்தியா எதிர் பங்களாதேஷ் பெப். 25: இலங்கை எதிர தகுதிகாண் அணி பெப். 26: பங்களாதேஷ் எதிர் தகுதிகாண் அணி பெப். 27: இந்தியா எதிர் பாகிஸ்தான் பெப். 28: பங்களாதேஷ் எதிர் இலங்கை பெப். 29: பாகிஸ்தான் எதிர் தகுதிகாண் அணி மார்ச் 1: இந்தியா எதிர் இலங்கை மார்ச் 2: பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் மார்ச் 3: இந்தியா எதிர் தகுதிகாண் அணி மார்ச் 4: பாகிஸ்தான் எதிர் இலங்கை மார்ச் 6: இறுதிப் போட்டி (க)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
24.09.1980

மறைவு
02.01.2016



## அமரர் திருமதி தீபா கெங்கேஸ்வரன்


கடந்த 02.01.2016 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி **தீபா கெங்கேஸ்வரன்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 30.01.2016 சனிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையினில் இடம்பெற்று அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 01.02.2016 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு தொலைபேசி மூலமும் நேரிலும் கலந்து கொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் அன்றைய தினம் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் இன்னும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**குறிப்பு: தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

குடும்பத்தினர்
பிரதான வீதி,
4 ஆம் வட்டாரம், முள்ளியவளை.









யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி நேற்றைய தினம் யாழ்.மாநகரசபை மைதானத்தில் ஆரம்பமாகியது. இதன் ஆரம்ப நிகழ்வு காலை 9 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்று விருந்தினர்கள் வர்த்தக கண்காட்சி நடைபெறும் மைதானத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் கே.விக்னேஷ் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் 300 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் அனுமதி இலவசமாக வழங்கப்படவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பள்ளிக்கார, கௌரவ விருந்தினராக இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவர் சாயிட் சகல் ஹுசைன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். 3 நாட்கள் நடை பெறவுள்ள இக் கண்காட்சி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது.

(படங்கள்:-பொ.சோபிகா, உ.சாளின்)

## கசிப்புடன் கைதான இருவருக்கு மறியல்

கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் உட்பட்ட இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

துன்னாலை சக்குச்சம்பா பகுதியில் நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது 3 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் ஆணொருவரும் அவருக்கு உடந்தையாக இருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அன்றைய தினமே நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது கசிப்புடன் கைதானவரை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அந் நபருடன் தொடர்பை பேணிய பெண்ணை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-5-60)

## முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்



யாழ். எயிட்டினால் முன்னாள் போராளிகளின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான செயற்றிட்டத்தின் கீழ் முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப் பட்டன.

## புதிய பேருந்துச் சேவை முதலாம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



இலங்கைப் போக்குவரத்து சபையின் பருத்தித்துறை மூளாய் பொன்னாலை வரையான இல.773 வழித்தட பேருந்துச்சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது என பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இப் பேருந்துச் சேவையானது பருத்தித்துறையில் இருந்து அதிகாலை 5.45 மணிக்கும், பிற்பகல் 2.15 மணிக்கும் என இரு சேவைகள் இடம் பெறுவதுடன் மூளாயில் இருந்து காலை 8மணிக்கும் மாலை4.30 மணிக்கும் என இரு சேவைகள் இடம் பெறவுள்ளன. இச் சேவையின் பாதை விபரம் பருத்தித்துறை–மந்திகை–நெல்லியடி–குஞ்சர் கடை–உடுப்பிட்டி–தொண்டைமானாறு–அச்சுவேலி–புத்தூர்–சுன்னாகம்–மல்லாகம்– தெல்லிப்பழை–மாவிட்டபுரம்– கீரிமலை–சேந்தாங்குளம்–விளான்–பண்டத்தரிப்பு– சித்தன் கேணி–சுழிபுரம்– மூளாய் என அமையும்.

அத்துடன்முதலாம் திகதி தொடக்கம் பருத்தித்துறை –சாவகச்சேரி வரையான 765 வழித்தடப் பேருந் துச் சேவை இடம் பெறவுள்ளது. அதிகாலை 5.30 மணிக்கு இச் சேவை ஆரம்பமாகவுள்ளது என பருத்தித்துறை சாலை முகாமையாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)




## அவைத்தலைவரால் உதவிகள் வழங்கல்

வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் அவரது உதவியாளர்களது சொந்த நிதி மூலம் மாதம் தோறும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண அவைத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. கடந்த வருடம் ஒக்டோபர் 5 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூன்றாம் கட்ட கொடுப்பனவின் கீழ் துவிச்சக் கரவண்டிகள், தையல் இயந்திரங்கள், கூரைத்தகடுகள், குடிசைக் கைத்தொழிலுக்கான உபகரணங்கள், கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், வியாபார முயற்சிக்குத் தேவையாக பொருட்கள் உள்ளிட்ட ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (இ-9)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ். மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

இதற்கமைய காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், அறை ஊழியர், வெதுப்பாளர் மற்றும் அலுமினிய பொருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர், கட்டட நிர்மாண உதவியாளர் போன்றவற்றிற்கும் பருத்தித்துறை தொழிற்பயிற்சி நிலையத்தில் நீர்க் குழாய் பொருத்துநர் பயிற்சியை சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்தில் அலுமினியம் பொருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர் போன்றனவும் யாழ்ப்பாணம் தொழிற் பயிற்சி நிலையத்தில் CISCO Certified Network Administrator (CCNA) கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை இல.12/1, கே.கே.எஸ். வீதியில் (வீரசிங்கம் மண்டபம்) உள்ள மாவட்ட அலுவலகத்தில் அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 05.02.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

# மாணவர்களை இணைக்கும் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.29, பிறவுண்வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் (யாழ்.தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகில்) எனும் முகவரியில் நடைபெறும் என்பதனை அதன் பணிப்பாளர் யூட் வோல்ரன் அறிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது தேசிய தொழிற்றகைமை மட்டம் 4 இனைப்பூர்த்தி செய்த ஆர்வமுள்ள மாணவர்களையும் பெற்றோர்களையும் ஏனைய நலன் விரும்பிகளையும் இந்நிகழ்வில் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ


Ministry of Skills Development and Vocational Training

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

In cooperation with

## உங்கள் எதிர்காலத்தை தொழிற்கல்வியினூடாக வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

கிளிநொச்சியிலுள்ள தேசிய பயிலுனர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையத்தில் இணைந்து தொழிற்பயிற்சி ஒன்றினை பெற்றுக்கொள்வதனூடாக சிறந்ததொரு தொழில் வாய்ப்பொன்றினை பெற்றுக்கொள்ளுங்கள்.

### தொழில்துறை மின்னியலாளர்
### (Industrial electrician)-NVQ level- 4

மேற்குறிப்பிட்ட தொழிற்பயிற்சியானது ஆரம்பமாகவுள்ளதால் ஆர்வமுள்ள இருபாலாரும் நேர்முகத்தேர்வொன்றிற்காக சமூகளிக்கும்படி கேட்டுகொள்ளபடுகின்றார்கள்.

**நேர்முகதேர்வு: 01.02.2016 மற்றும் 02.02.2016**
(எதிர்வரும் **திங்கள்** மற்றும் **செவ்வாய்க்கிழமை**)

**இடம்: NAITA பயிற்சி நிலையம், A9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

**ஆவணங்கள்:**
1. அடையாள அட்டை
2. பாடசாலை சான்றிதழ்கள்

**கிடைக்கக்கூடிய நன்மைகள்**

1. கற்கும் போது போக்குவரத்துக்கான பருவகால சீட்டுக்கள்.
2. இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் உள்ளகபயிற்சிகள்.
3. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ்.

**மேலதிக விபரங்களுக்கு: தொ.பே-0212285615**

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

(சி-3594)


## அரசியல் யாப்பின் 20 ஆவது சீர்திருத்தத்தில்

# சிறுபான்மையினரை உயிரோடு மூழ்கடிக்க கபடத்தனமான திட்டங்கள் அரங்கேற்றம்

## எச்சரிக்கிறார் அமைச்சர் அமீர் அலி

(கொழும்பு)

தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் நல்லெண்ணத்துடன் இணைந்து செயற்பட மறுத்தால் இலங்கையின் அரசியல் பரப்பில் ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவுவதுடன் இரண்டு சமூகங்களும் ஏமாற்றப்படுவதிலேயே போய் முடியும் என கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் நடைபெற்ற சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஆண்டுகள் முஸ்லிம்களுக்கு மிகவும் பெருமளவான பிரச்சினைகளுடன் சவால் நிறைந்த ஆண்டாக அமையவுள்ளது.

தமிழர்களை கபடத்தனமாகப் புறக்கணிக்கவும் முஸ்லிம்களை ஏமாற்றவும் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து சிறுபான்மை மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அரசியல் யாப்பில் செய்யப்படும் 20 ஆவது திருத்தம் சிறுபான்மையினரை உயிரோடு மூழ்கடிக்கும் பரிதாபத்திற்குரியது என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் தமிழர்களையும் முஸ்லிம்களையும் தந்திரமாக ஏமாற்றுவதற்கான ஒரு பரந்தளவிலான ஒரு திட்டம் என ஒருவகையான அச்சம் நிலவுகிறது.

நல்லாட்சி அரசாங்கம் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகத் தெரியவில்லை.

கடந்த 28 வருடங்களாக கீரியும் பாம்புமாக இருந்த ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையிலான உறவின் அடிப்படையில் இன்று இணைந்து முடிவெடுப்பது என்பது சாதகமில்லை.

எப்படியிருந்தாலும் அர்த்தமுள்ள நல்லிணக்கமும் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவும் அதிகளவு தியாகமும் தேவைப்படுகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (3)


**யாரிடம் பேசுவது?**

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
(3363) Sponsored by Enlightenment Circle, UK



## மாபெரும் புத்தகக் கண்காட்சி

**மக்மிலன் புத்தகசாலை**
**யாழ்ப்பாணம், கொழும்பு**

**இடம்:-** யாழ். மாநகர சபை மைதானம் (சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)

**காலம்:-** 29 ,30, 31/01/2016

**காட்சியறை இல :- 159, 160**

பாடசாலைக்கு தேவையான அனைத்து புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
0776218383
0112449565
(3417)


## இராசி பலன்

30.01.2016
(தை 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
சஷ்டி பிற்பகல் 4.25 மணிவரை
அத்தம் காலை 7.26 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரட்டாதி இரவு 8.44 இற்கு துலாம்-சந் | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் | குரு. சந் |

**மேடம்:** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகலாம், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு, உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**சிம்மம்:** வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர் மனம் நோகாது நடந்து கொள்வது நல்லது, சிந்தனை மிகுதியான நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்:** காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர்கள் உதவி செய்ய முன்வரலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** உள்ளம் மகிழும் விதத்தில் செய்தியொன்று வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு, உறவினர்களின் வருகையுண்டு.

**தனுசு:** உறவினர்கள் உங்களின் மனம் போல நடந்து கொள்வர், புத்தி சாதுர்யமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பகையொன்று நட்பாகலாம், செய்யும் காரியங்களில் உங்களின் திறமை வெளிப்படும் நாள்.

**கும்பம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**மீனம்:** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# சுனாமியினாலும் யுத்தத்தினாலும் அதிகம் பாதிக்கப்பட்டது முல்லை.மாவட்டம்

## கல்வித்துறையில் முன்னேறி வருகிறது என்கிறார் அரசாங்க அதிபர்

(பனிக்கன்குளம்)

**நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினாலும் ஆழிப்பேரலையினாலும் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட மாவட்டமாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல தேவைகள், நிறைவு செய்யப்படவேண்டியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு வலயக் கல்வித் திணைக்களத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு கடந்த 27ஆம் திகதி பிற்பகல் நடைபெற்றது .

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

"முல்லைத்தீவு மாவட்டமானது கடந்த கால யுத்தத்தினாலும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட ஓர் மாவட்டமாகக் காணப்படுவதுடன் அதனுடைய, தாக் கங்கள முல்லைத்தீவு வலயக்கல்வித்திணைகளத்தையும் விட்டு வைக்க வில்லை.

உருக்குலைந்து சின்னா பின்னமாகிப் போய்க்காணப்பட்ட வலயக்கல்வித் திணைக்களமானது புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்படுகின்றது.

கல்வித்துறை சார்ந்த விடயங்களில் முன்னேறி வருகின்ற மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. கடந்த காலங்களில் போதிய வசதிகள் இல்லாத நிலையில், வலயக் கல்வித் திணைக்களம் இயங்கி வந்துள்ளது. இருந்த போதும், முல்லைத்தீவு வலயக்கல்வி திணைக்களம் முன்னின்று தனது சேவையினை செய்துள்ளது. இதேபோன்று பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் தங்குமிட வசதிகள் இலலாத நிலை காணபபடுகின்றது. அவற்றையும் பூர்த்தி செய்து வழங்க வேண்டிய தேவையுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

---

### அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பில்

# கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புலமையாளர்களுடன் இன்று சந்திப்பு

(பளை)

இலங்கையின் அரசியலமைப்பை மாற்றும் முகமாக இலங்கை அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழுவுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பான கருத்துக்களை முன்வைப்பதற்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 9ஆம் திகதி பாராளு மன்றத்தில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல்,தேர்தலில் விருப்பு வாக்கு முறைமையை ஒழித்தல்,தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணுதல் ஆகிய தீர்மானங்களுக்கு அமைவாக இது தொடர் பான புரிதல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்டப் புலமையாளர்களுடன் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனின் ஏற்பாட்டில் மேற்படி சந்திப்பு இடம் பெறுகின்றது என்பதுடன்,இச் சந்திப்பில்,யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் அரசியலமைப்பு சம்பந்தமாக கருத்துரைகளை வழங்கவுள்ளாா்.(2-3-291)

---

# பாலக்கட்டுவன் குள புனரமைப்பு அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்

## முள்ளியவளை கமநலசேவை நிலைய அதிகாரி

(தண்ணீரூற்று)

முள்ளியவளை குமாரபுரம் கமக்காரர் அமைப்பின் நடப்பு ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு நேற்று முன் தினம் முற்பகல் 10மணியளவில் குமாரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் முள்ளியவளை கமநல சேவை நிலைய அதிகாரி எஸ்.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக சி.ஆரூரன்,செயலாளராக சி.பவதர்சன், பொருளாளராக பு.பிரியந்தன்,உப-செயலாளராக ம.ஸ்ரீதேவி,உப-தலைவராக வி.மதனகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக 4பேர் தெரிவாகினர்.

இதில் முள்ளியவளை கமநல சேவை நிலைய அதிகாரி எஸ். சுகந்தன் உரையாற்றுகையில்,

குமாரபுரத்திலுள்ள பாலக்கட்டுவன்குளப் புனரமைப்புக்கு கமக்கார அமைப்பிலுள்ள நிதியைப்பெற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையன்று குள புனரமைப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு கமக்கார அமைப்பினருக்கு பணித்துள்ளேன்.

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தை அடுத்து முதன்முறையாக இக்குளத்தின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இக்குளத்தின் கீழ் 86 ஏக்கர் வயற்காணிகள் பெரும்போகம், சிறுபோகம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினாா. (2-292)

---

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் உதவிகளைத் தடுக்காதீர்கள்

## இல்லையேல் இறைவனுக்குப் பதில் சொல்ல வேண்டி வரும் என கடிந்தார்-அமைச்சர் றிசாத்

(குருமன்காடு)

மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைக் கிடைக்க விடுங்கள் என வவுனியா மாவட்ட திட்டப் பணிப்பாளரை அமைச்சர் றிசாத் பதியுதீன் கடிந்த சம்பவம் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற போது கடந்த அரசின் காலப்பகுதியில் "வீட்டுக்கு வீடு" திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி மக்களிடம் இருந்து திரும்பப் பெறப்பட்டமை தொடர்பாக அமைச்சர் திட்டப் பணிபபாளரிடம் கேளவியெழுப்பினார்.

இதன்போது கருத்து தெரிவித்த திட்டப்பணிப்பாளர்,அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் இதன்போது நிதி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந் நிதியை மீளப்பெற்றோம் என தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் அந்நிதியை என்ன செய்தீர்கள் என கேட்டபோது, திறைசேரிக்கு அனுப்பியதாக திட்டப்பணிப்பாளர் தெரிவிக்கவே மக்களுக்கு செல்ல வேண்டியதை செல்லவிடுங்கள்.

பல மாவட்டங்க்ளில் கோடி கோடியாக வழங்கினார்கள். எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் வவுனியா மாவட்டத்தில் மாத்திரமே நிதியை திரும்ப பெற்றுள்ளீர்கள். ஏன் பெற்றீர்கள் என்பது தொடர்பாக மக்களுக்கு உதவி செய்யும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விசாரணைக்கு செல்கின்றனர்.

நீங்கள் மக்களுக்கு செல்வதை தடுக்காதீர்கள். யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு கிடைப்பது கிடைக்கட்டும் இல்லையேல் நீங்கள் இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டியேற்படும் என கோபமாக தெரிவித்தார். (2-250)

---

# தேசிய தேக ஆரோக்கிய வாரத்தை வலியுறுத்தி வவுனியாவில் நடைபவனி




ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக "விளையாட்டின் மூலம தேக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் தேசிய ஒற்றுமையையும் அபிவிருத்தியையும் கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் வவுனியாவில் சிவில் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபவனியும் உடற்பயிற்சியும் நடைபெற்றது.

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தலைமை நிலையத்தின் முன்பாக மதகுருமாரின் ஆசியுடன் ஆரம்பித்த நடைபவனி வவுனியா பேருந்து நிலையத்தினூடாக வவுனியா நகரசபை மைதானத்தை சென்றடைந்தது.

அங்கு அனைவருக்கும் உடற்பயிற்சியும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.மகிந்த ஏக்கநாயக்க, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க, வவுனியா உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பண்டார, ஓய்வுபெற்ற வடக்கு மாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளர் அண்ணாதுரை, வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சண் அபயவர்த்தன, சிவில் அமைப்புக்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

---

# வவுனியா மாவட்டத்தில் 27 கிராம அலுவலர் வெற்றிடங்கள்

## ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

வவுனியா மாவட்டத்தில் 27 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பிரதேச செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் 10 பேருக்கும் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் 7 பேருக்கும் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 10 பேருக்குமாக 27 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுவதாக அந்தந்த பிரதேச செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, தேவையான கிராம அலுவலர்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை குறித்த அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் இணைத் தலைமையிலான ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (2-250)

---




# பச்சிலைப்பள்ளி கூ.ச. புதிய நிர்வாகத் தெரிவு

(பளை)

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவும் பொதுச்சபை அங்கத் தவர்கள் தெரிவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.தியாகராசா தலைமையில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளது. (3-291)

---







வவுனியா வடக்கு ஒலுமடு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல திறனாய்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் எஸ்.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது....
(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# கிளிநொச்சி அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் ஆராய்வு

## வடக்கு மாகாண முதலமைச்சர் பங்கேற்பு

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நான்கு இணைத்தலைவர்களின் கீழ் இடம்பெற்றது.

இக்கூட்டம் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைசசர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இவர்களுடன் கிளி. மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சரவணபவன் வடக்கு மாகாண அமைச்சர்கள் இ.ஐங்கரநேசன், பா. டெனிஸ்வரன், த.குருகுலராஜா மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம், சு.பசுபதிபிள்ளை, வை.தவநாதன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள் உளளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் முதலமைச்சர் தனதுரையில் குறிப்பிடுகையில், மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் முதலமைச்சருடன் மத்திய அமைச்சர் ஒருவரும் இருப்பதற்கே சட்டம் உள்ளது. ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவே செயற்பட தாம் ஏற்றுக்கொள்ளும் போதிலும் சட்டம் அதறகு இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கடந்த காலங்களைப் போன்று அபிவிருத்தி குழு கூட்டமானது இருக்க மாட்டாது. அதற்காகவே இவ் அபிவிருத்தி குழுககூட்டத்தில் அனைவரும் உள்வாங்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் அனைவரும் மதிக்கப்படுவதாகவும், கடந்த அரசாங்கம் அவ்வாறு செயறபடவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கடந்த காலங்கள் போன்றல்லாது, அனைவரும் இணைந்து செயற்படவுள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைகளுடன் அபிவிருத்தியும் மக்களுக்கு தேவை என அவரது உரை அமைந்திருந்தது.

இ.அங்கஜன் கருத்துத் தெரிவிக்கையில்,

அனைவரும் இணைந்து மாவட்டத்தில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து இணை தலைவர்களாக செயற்பட பணித்ததாகவும் அதன்படி தாம் தொடர்ந்தும் செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, சுகாதாரம் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் காணபபடும் குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது, குறிப்பாக வைத்தியசாலையில் நிலவும் ஆளணி பற்றாக் குறை தொடர்பாகவும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் முக்கிய பணி நிலையில் இருப்பது தொடர்பிலும் பேசப்பட்டது. குறித்த பதவி நிலைக்காக விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றமையால் அவ்வாறு இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டது.

இருப்பினும் குறித்த பதவி நிலையில் பெரும்பான்மை இனத்தவர் இருக்கின்ற போதிலும் தற்போது வைத்திய சாலை முன்னோ க்கிக் கொண்டு செல்லப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது.



பூநகரி, விசுவமடுஆகிய பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் காணிகளை இடை நிறுத்துவதற்கு அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது,

பூநகரி கடல் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மீன்பிடி, இந்திய மீனவர் வருகையை கட்டுப்படுத்துமாறு கவனம் செலுத் தப்பட்டது.

பூநகரி பிரதேசத்தில் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டது, குறித்த பிரதேசத்தில் அமைக்கப்படுவதற்கு முன்னர் நிபுணர் குழு அமைக்கப் பட்டு ஆராயப்பட வேண்டும்.

குறித்த நிபுணர் குழு அறிக்கை சுன்னாகம் நீர் பிரச்சினை போன்று அமையக் கூடாது எனவும் கருத்து முன் வைக்கப்பட்டதுடன், வேலையாட்கள் அமர்த்தல் போன்ற அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டதன் பின்னரே அனுமதி அளிப்பது தொடர்பில் தீர்மானிக்கப் படும் என தெரிவிக்கப்பட்டது.

ஏ-9வீதியை அண்மித்த பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு காணி ஒதுக் கப்பட்டது. குறித்த ஒதுக்கப் பட்ட காணியில் அரச, தனியார் பேருந்து நிலையம் அமைக்கப்படும் எனவும் தீர் மானம் எட்டப்பட்டது. தற் போது பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் கலா சாரமண்டபம் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது, தொடர்ந்து கல்வி உட்பட ஏனைய விடயங்கள் ஆராயப்படும் என முதலமைச் சரால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கூட்டம் நிறைவுக்கு வந்தது. (2-15-254)

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் முல்லையில் 4பேருந்து தரிப்பிடங்கள் அமைப்பு





(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கென நான்கு பேருந்துத்தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு பேருந்து தரிப்பிடமும் முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில் முள்ளியவளைப்பகுதியில் ஒரு பேருந்து தரிப்பிடமும் மாங்குளம் - மல்லாவி வீதியில் செல்வராணி குடியிருப்பு பகுதியில் ஒரு பேருந்து தரிப்பிடமும் கண்டி வீதியில் பனிக்கன்குளம் பகுதியில் ஒரு பேருந்து தரிப்பிடமுமாக மொத்தம் நான்கு பேருந்து தரிப்பிடங்கள் அமைக் கப்பட்டு மக்கள் பாவனைக் காக விடப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள், மக்கள் பெரிதும் நன்மை யடைந்துள்ளனர். (2-281)




## உடற்பயிற்சி தேசிய வாரம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு



ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட உடற் பயிற்சி தேசிய வாரம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார திணைக்களத்தினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து குறித்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

பரவிப்பாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்கெடுத்தனர்.

உடற்பயிற்சியை தொடர்ந்து ஏ-9 வீதி ஊடாக நடை பயணமும் முன்னெடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். (2-15)





கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும். இதனை முன்னிட்டு நேற்றுக்காலை 6.30 மணியளவில் கிளி/கரடிப்போக்குவரத்துச் சந்தியிலிருந்து கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் வரையிலான 11 கிலோ மீற்றர் நெடுந்தூர ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றதைப்படங்களில் காணலாம். (படங்கள்:-சோலைநகர் செய்தியாளர்)

## வன்னி தொண்டராசிரியர் நியமனம் பற்றி பிரதமருடன் தொலைபேசியில் உரையாடல்

வன்னி மாவட்ட தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்து வன்னி தொண்டராசிரியர் ஒன்றியம் சார்பாக அதன் செயலாளர் தர்சன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த 27 ஆம் திகதி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

தொண்டராசிரியரின் நிரந்தர நியமனம் குறித்து உரையாடுவதற்கு சந்தர்ப்பம் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போது எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அது தொடர்பாக உரையாட முடியும் என பிரதமர் பதிலளித்துள்ளார்.

எனினும் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சந்தர்ப்பம் வழங்குவதாக பிரதமர்உறுதியளித்துள்ளார்என சங்கத்தின் செயலாளர் தர்சன் தெரிவித்துள்ளார். (3-292)

## 4ஆயிரம் ஏக்கரில் இடைப்போக நெற்செய்கை ஆரம்பம்

### கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 4 ஆயிரம் ஏக்கரில் இடைப்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ந.சுதாகரன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இரணைமடுக்குளம் புனரமைக்கப்படுவதால், கிளிநொச்சி மாவட்டத்தில் இம் முறை சிறுபோக நெற்செய்கை செய்வதில்லையென முன்னர் தீர்மானிக்கப்பட்டது. தற்போது, காலபோக நெற்செய்கையின் அறுவடையானது ஆரம்பித்துள்ளது.

காலபோக நெற் செய்கை அறுவடை செய்யப் பட்ட, ஈரமான நிலப்பரப்பில் இடைக்கால போகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இது தனியான ஒரு போகமாகச் செய்கை பண்ணப்படுகின்றது எனக் கூறினார்.

இதனையடுத்து இது தொடர்பில் தனக்கு முன்னரே ஏன் அறிவிக்கவில்லையெனவும், எவ்வாறு மானிய உரம் உள்ளிட்ட விடயங்களை செய்ய முடியும் என மாவட்டச் செய லர் சுந்தரம் அருமைநாயகம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுதாகரன், சிறுபோகம் இம் முறை செய்யப்படவில்லை. ஈர நிலத்தில் செய்கை பண்ணுவதற்கான இந்த 4 ஆயிரம் ஏக்கரும் செய்கை பண்ணப்படுகின்றது. முன்னரே அறிவிக்காமல் மேற்கொள்ளப் பட்டமைக்கு மன்னிப்பு கோருகின்றேன் என்று கூறினார். (2)

# வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தமது கருத்தை தெரிவிக்க ஒரு வாய்ப்பு

(கொழும்பு)

புதிய அரசமைப்புக்கு இலங்கையில் உள்ள மக்கள் போன்று சர்வதேச நாடுகளில் வாழும் இலங்கையர்களும் தங்களது கருத்துக்களையும், அபிலாஷைகளையும் முன்மொழிய முடியும்.

அதற்கான விசேட இணையத்தளம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு விசும்பாயவில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது. இக்குழுவின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் வேலைத்திட்டம் மிகவும் சாதகமாக அமைந்தது.

மக்களின் மனாங்க ளில் உள்ள பல்வேறுபட்ட கருத்துகள் அச்சமின்றி முன்வைக்கப்பட்டன.

259 பேர் வாய் மூலம் தமது கருத்துகளைப் பதிவுசெய்தனர். 340 பேர் மின்னஞ்சல் ஊடாகவும், 200 பேர் பிரேரணை மூலமும் 70 பேர் தொலைநகல் மூலமும் தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பல குழுக்களாகச் செல்லவுள்ளோம்.

கொழும்பு மாவட்டத்தில் மக்கள் தமது கருத் துகளைத் தெரிவிக்க மேலும் கால அவகாசம் கோரியுள்ளதால் இறுதி யாக மீண்டும் மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் கொழும்பில் கருத்துகள் கோரப்படும்.

ஒரு ஜனநாயக நாட்டில் தங்களின் ஆட்சியின் அரசமைப்பை உருவாக்கவும் அது தொடர்பில் தீர்மானிக்கவும் மக்களுக்கே பூரண அதிகாரம் உண்டு.

மக்கள் தமது கருத்துக்களை அச்சமின்றி தெரிவிக்க வேண்டும். இது வரலாற்று ரீதியான சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை போன்று சர்வதேச ரீதியில் வாழும் இலங்கையர்களும் தமது கருத்துகளை முன்வைக்க பூரண உரித்துடையவர்களாவர். இவர்களுக்கு நேரடியாக தமது கருத்துகளைத் தெரிவிக்கும் வாய்ப்பு குறைவாகக் காணப்படுவதால் இவர்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ள விசேட இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

WWW.YOURCONSTITUTION.LK

என்ற இணையத்தளத்தின் ஊடாக சர்வதேச வாழ் இலங்கையர்கள் தமது யோசனைகளை முன்வைக்க முடியும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அனைத்து இன மக்களும் தமது ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த உரிமையுடையவர்கள்.

எனவே, சகல மக்களும் சமத்துவத்துடன் வாழும் அரசமைப்பு கட்டாயமாகத் தேவையாகவுள்ள நிலையில் அனைவரும் தமது கருத்துக்களை முன்வைக்க முன்வர வேண்டும்.

எதிர்வரும் முதலாம் இரண்டாம் திகதிகளில் கண்டியிலும், 5, 6 ஆம் திகதிகளில் வவுனியாவிலும், 8, 9ஆம் திகதிகளில் கிளிநொச்சியிலும்,3, 4ஆம் திகதிகளில் மன்னாரிலும்,12, 13ஆம் திகதிகளில் முல்லைத்தீவிலும்,15, 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும்,17, 18 ஆம் திகதிகளில் புத்தளத்திலும்,19, 20ஆம் திகதிகளில் நுவரெலியாவிலும், 23, 24ஆம் திகதிகளில் பதுளை மற்றும் திருகோணமலையிலும், 27, 28ஆம் திகதிகளில் அப்பாறையிலும் மக்கள் தமது கருத்துகளைத் தெரிவிக்கலாம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நீதியான பொலிஸ் சேவையை உருவாக்குவதே நோக்கம்

நீதியான பொலிஸ் சேவையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்என சட்டம்ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் நீதியான பொலிஸ் சேவையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.பொலிஸ் உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தும் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படும்.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய அனைத்து மக்களுக்கும் நீதியை வழங்கும் சூழ்நிலை உருவாக்கப்படும்.

சம்பள உயர்வு மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ)

# ஜனாதிபதிக்கு எதிராக கூட்டத்தில் ஊ சத்தம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், நேற்று முன்தினம் மகாவலி கேந்திர மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது சில உறுப்பினர்களால் பல சந்தர்ப்பங்களில் ஊ சத்தமிடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் போட்டியிட்டு வெற்றி பெற முடியும் எனவும் ஊடகங்களில் காட்டும் அளவிற்கு எதிர்ப்புகள் ஒன்றும் இல்லை என லலித் திஸாநாயக்க மற்றும் லக்ஷ்மன் செனவிரத்ன ஆகிய உறுப்பினர்கள் கூறும் போது, ஊ சத்தமிட்டதோடு அவர்களை பேசவிடாமல் இடை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்று முன்வைத்துள்ளார்.


எதிர்வரும் காலங்களில் எதிர்க்கட்சியில் செயற்படும் உறுப்பினர்களை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் அவர் கோரியுள்ளார்.

இதற்கு இணக்கம் வெளியிட்டுள்ள ஜனாதிபதி கட்சி இணைந்திருப்பது அவசியம் எனவும் அது பிளவடைந்தால் வெற்றியடைய முடியாதெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

*பிரிட்டனின் ஆலோசனைக்கமைய*

# தோல்வியடைந்த ராணுவமாக மாற்றுவதற்கு அரசு முயற்சி

## உதய கம்மன்பில கூறுகிறார்



போர் வென்ற இராணுவத்தை பிரித்தானியாவின் நிதியுதவி மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் தோல்வியடைந்த இராணுவமாக மாற்ற வேண்டாம் என நாட்டை நேசிக்கும் தரப்பினர் என்ற வகையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹிகோஸ்வாயர் இலங்கை இராணுவத்திற்கு 6.6 மில்லியன் பவுண்களை அதாவது 200 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை தருவதாக இலங்கையில் வைத்து தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தமிழ் சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவா இலங்கை இராணுவத்திற்கு நிதி வழங்கப்படுகிறது என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சியோபோன் மெக்டோனா கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஹிகோ ஸ்வாயர் இலங்கைக்கு வேறு எதற்கும் பணம் கொடுக்கவில்லை. பொறுப்புக் கூறல் தொடர்பான செயற்பாடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏறபடுத்தவும் அதற்கு தேவையான மாற்றத்தை இராணுவத்தில் ஏற்படுத்தவுமே இலங்கைக்கு நிதி வழங்கப்படுகிறது என கூறியுள்ளார்.

பிரித்தானிய இராணுவத்தின் முன்னுதாரணத்தை பெற்றே இலங்கை இராணுவம் கட்டமைக்கப்படவுள்ளது.

யாரிடம் இந்த முன்னுதாரணத்தை பெறபோகின்றனர்?. ஈராக், ஆப்கானிஸ்தானில் போர் குற்றங்களை செய்த பிரித்தானிய படையினரின் குற்றங்கள் குறித்து அறிய சில்கோட்டை ஆணைக்குழுவை நியமித்த பிரித்தானியவிடம் இருந்து முன்னுதாரணத்தை பெறபோகின்றனர்.

இலங்கையிலும் இதனை போன்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக் குழு 16 மாதங்களில் தனது அறிக்கையை நாட்டின் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

எனினும் 6 வருடங்கள் கழிந்தும் சில்கோட் ஆணைக் குழுவின் அறிக்கை இன்னும் கையளிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் இரகசியங்கள் உணர்வுபூர்மானது என்பதால் இதனை வெளியிடக் கூடாது என்று பிரித்தானிய இராணுவம் அழுத்தம் கொடுத்து வருகிறதுசில்கோட் ஆணைக் குழுவின் அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதை கூட உலகம இதுவரை அறியவல்லை.

இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மரண தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இவை எதனையும் செய்யாத பிரித்தானியா, அமெரிக்க உட்பட நேச நாடுகள் ஈராக்கில் மாத்திரம் சுமார் 10 இலட்சம் பொதுமக்களை கொலை செய்துள்ளன.

இவற்றைமறைத்து கொண்டிருக்கும் பிரித்தானியா, இலங்கை இராணுவத்தை மாற்றியமைக்க போவதாக கூறுகிறது எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:48 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HND Civil Eng/ அரசதொழில்<br>தொ.இ: B/3624 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/4165 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 46 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3625 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 6<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4168 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3631 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 86செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/4176 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 23செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/3636 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 60சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4178 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–79

# அவரைக்கும் அவருக்கும் முக்கியத்துவம் கொடுங்களேன்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 76

**வாருங்கள் எம்மினியஉறவுகளே!**

தானியப் பயிர்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் போல பசுமைப் புரட்சியில் அவரைப் பயிர்கள் கணக்கிலெடுக்கப்படவில்லை. முக்கியமாக கண்டு கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். தானியப் பயிர்களான நெல், சோளம் மற்றும் கோதுமை ஆகிய மூன்றுக்கும் பசுமைப் புரட்சி ஆரம்பத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்காவிட்டால் உலக மக்கள் அனைவருக்கும் உண்பதற்கு உணவு கிடைத்திருக்காது. சனத்தொகைப் பெருக்கத்தை சமாளிப்பதே மிகவும் முக்கியமானதாக கருதப்பட்ட அந்தக் காலங்களில் உணவுற்பத்தியை நாமே மேற்கொண்டு அதன் மூலம் அனைவருக்குமான உணவு என்பதில் அனைவரும் சிந்தித்து செயற்பட்டனர். ஆனால் உணவில் முக்கிய உணவுப் பொருட்களின் இருப்பை இந்த அவசரம் உறுதி செய்து கொள்ளவில்லை. சமநிலை உணவு எனப்படுவதற்கு அர்த்தங்கள் பலவுள்ளன. புதிய உணவுகளாயினும் புரத உணவுகள்ாயினும் அதனில் பயன்படுத்தப்படுகின்ற பல வகையான பயறு, உழுந்து, கௌபி, துவரை, கொள்ளு, பயத்தை,போஞ்சி, சிறகவரை, கொத்தவரை, நிலக்கடலை என்பனவற்றை மதிப்பேற்றஞ் செய்தால் நாம் புதிய உணவுகளை தயாரிப்பதற்கு தயாராகி விடலாம். தென்பகுதியிலிருந்து இங்கே வருகை தருகின்ற எமது நாட்டு சுற்றுலா பயணிகள் வடபகுதியில் தயாராகும் நிலக்கடலை, பிஸ் கட்டினை வரிந்து கட்டிக்கொண்டு வாங்குவதிலிருந்து இதனை சற்று அனுமானிக்கலாம். நிலக்கடலையும் ஒரு அவரைத் தாவரமே. இங்கே அதன் முக்கியத்துவம் முத்திரை பதிக்கின்றமையை காணலாம்.

இன்று வரைக்கும் நாம் சோறு, பிட்டு, தோசை, இடியப்பம், இட்லி என மாறிமாறி உருவத்தில் மாற்றங்கொணடு ஒன்றையே உட்கொள்வதால் அநேகமானவர்கள் பலவிதமான நோய்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எமது உடலுக்கேற்றபடி, உடல் நிறைக்கேற்றபடி, சமமான உணவினை உட்கொள்ளுதல் அவசியமாகின்றது. குறிப்பாக மாச்சத்தினை அளவுடன் உள்ளெடுத்து அதனுடன் புரதச்சத்து, நார்ச்சத்து, தேவையானளவு விற்றமின்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து என்பனவற்றை உள்வாங்குவதற்கு தயாராக வேண்டும். சந்தையில் கேள்வியதிகமான சத்துப் பொருட்களை நாம் அலசியாராய்ந்தால் அவற்றிற்கான விலை அளவுக்கு மீறியிருக்கும். ஆனால் கேள்வி குறைந்த அதி முக்கிய மரக்கறிப் பயிர்களை நாம் கண்டுகொள்வதேயில்லை. இவ்வாறான பயிர்களுக்கு விலையும் மிகவும் குறைவாக இருக்கும். இவ்வகையானவற்றை தெரிந்து வாங்கி பயன்படுத்தினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடலாம். விலையும் மலிவானதாக இருக்கும். அறுவடை செய்தவுடன் வாங்கலாம், சத்தானதாக இருக்கும். உடலாரோக்கியத்தையும் நாம் பேணிட முடியும். ஊட்டச்சத்து குறைவான பல பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு சத்துணவு கொடுப்பது மிக முக்கியதாகும். அதற்கு பயன்படக்கூடிய முக்கியமான உணவுப்பயிர் அவரையினமே.



அவரைப் பயிர்களுக்கான பரிகரணம் சரியானதாக செய்யப்படவேண்டும். இதற்கு அதிகம் தழைச்சத்து தேவைபபடாது. அவரைப்பயிர்கள் தழைச்சத்தை மண்ணில் நிலைநாட்டும் கைங்கரியத்தை செய்வதனால் அவற்றை நாம் முடிந்தளவில் பயிர் செய்யலாம். வளியிலுள்ள தழைச்சத்தை றைசோபியம் என்னும் பக்ரீறியாவின் உதவியுடன் மண்ணில் பதிக்கின்றது. இந்த இயற்கையின் விநோதத்தை பலவிடங்களில் நாம் அவதானிக்க முடியும். தேவையேற்படுமிடத்து அவற்றின் பயிர்ச்செய்கையை பலமடங்கால் அதிகரிக்கலாம்

அவரைப் பயிர்களுக்குள்ள தனித்துவமான சிறப்பினை வேர்களில் முடிச்சுக்களை ஏற்படுத்துவதிலிருந்தும் அவற்றை பசுந்தாள் பசளைகளாக நிலத்திற்குள் சேர்ப்பதிலிருந்தும் அளவிடலாம். அனைத்து அவரையினங்களிலும் சிறப்புக்கள் உள்ளன. இவ்வாறான அவரையினங்கள் அவசியமாக உணவினுள் சேர்க்கப்படவேண்டும். வீட்டுத் தோட்டத்தில் இவற்றை வளர்ப்பதற்குரிய நிலப்பரப்பு சிறிதாக இருந்தாலே போதுமானது. வீட்டுத்தோட்டத்தில் அவரைக்குரிய முக்கியத்துவத்தை நாங்கள் கொடுக்கத் தொடங்கினால் அவரையினுடைய மதிப்பும் உயரும். வெறுமனே நடவு செய்வது மட்டும் போதாது. அதனை உணவுக்காக பயன்படுத்தவும்வேண்டும்.

நாம் நடவு செய்து உணவாக உட்கொள்வதற்கு சிரமப்படும் போது எமக்காக உணவு செய்யும் உழவனுக்கு நாம் மதிப்பளிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். வரமபே தலகாணி வைக்கோலே பஞ்சுமெத்த வெற்றுடம்பே பட்டாடை என நாள் முழுக்க வெயிலிலே காய்ந்து பயிர்ச் செய்கையிலீடுபடும் உழவனுக்காக நாம் என்ன செய்யப் போகின்றோம். அவருக்காக நாம் வருடந்தோறும் தினமொன்றை வரையறை செய்து உழவர் தினமாககொண்டாட வேண்டும். இதுதனித்துவமான தினமாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். எம்மினிய உறவுகளே! உழவர் தினத்தில் அவரை கௌரவப்படுத்தி அழகுபார்ப்பது மிகவும் முக்கியமானதாகும். அவர் மனங்குளிரவேண்டும். நாம் உண்ணும் உணவுப்பருக்கையில் அவர்களது உழைப்பு ஊறியிருக்கின்றதை உண்ணும் போது உப்புக்கரிப்பதிலிருந்து அறிந்து கொள்ள முடியும். உப்பிட்டவரை, உணவு தந்தவரை உள்ளளவும் நினை என்பது இங்கே சாலப்பொருந்தும். அதற்கும் மேலாக விவசாயப் பெருமக்களின் பிரச்சினைகள் களைந்தெறியப்பட வேண்டும். உள்ளீடுகளை பெறுதல், தேவையான தொழில்நுட்பம், பீடைப் பிரச்சினை, சந்தைப்படுத்தல் என்பன அவர்கள் முன் வெளிக்கொணரப்பட்டிருக்கும் அதி முக்கிய பிரச்சினைகளாகும். அவற்றிற்கான தீர்வு விரைந்து காணப்படல் வேண்டும்.

அவரைப் பயிர்களிலான உணவினை நீரிழிவு நோயாளர்களுக்கான சிறந்த உணவாக வரையறை செய்திருக்கின்றனர்.

மேலும் அவரையை முளை கட்டி உணவாக்கினால் இன்னும் சிறப்பு என ஆய்வு சொல்கின்றது. பலவகையான அவரைப்பயிர்களை கொண்ட எமதுபூமியில் அவற்றை வளர்த்து நாமும் உயர்வடையலாம். அவரைப் பயிர்கள் பபேசியே குடும்பத்தைச் சார்ந்தவையாதலால் அவற்றின் பூக்கள் மகரந்த சேர்க்கையாளர்களை கவரும் தன்மை வாய்ந்தவை. அதனால் மகரந்த சேர்க்கையாளர்களுக்கான தீவனமும் இப்பூக்களிலிருந்து கிடைக்கும். அவரைப்பூ அழகானது. பலவிதமான அவரைத்தாவரங்களை வீட்டுத்தோட்டத்தில் வளர்த்து அவற்றின் பயனை நாம் அனைவரும் பெறுவோமாக.

## யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு வீதியோட்டப்போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சிறப்பு வீதியோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை அதிபர் எஸ்.கே.தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வீதியோட்ட நிகழ்விற்கு யாழ். வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில்கல்லூரியின் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் வீதியோட்ட நிகழ்வு காலை 6.15 மணிக்கு கல்லூரி வாசலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (இ-5)

## மகாத்மா காந்தியின் சிரார்த்த தினம் இன்று

மகாத்மா காந்தியடிகளின் 68 ஆவது சிரார்த்தன தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகரப் குதியில் அமைந்துள்ள காந்தி சிலையடிக்கு அருகாமையில் சிரார்த்த தின நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை அறவழிப் போராட்டக்குழு நடத்தும் இந்நிகழ்வில் அஞ்சலி உரைகள், சிரார்த்த தின நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (இ-5-19)

## வால்களுடன் வண்ணத்துப்பூச்சி



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் உள்ள மரம் ஒன்றில் வால்களை உடைய வண்ணத்துப்பூச்சி ஒன்று கடந்த புதன்கிழமை இரவு தென்பட்ட போது... (கரணவாய் செய்தியாளர்)

# அகதிகள் பயணித்த படகு கவிழ்ந்து 10 குழந்தைகள் உட்பட 25பேர் பலி!

## தொடரும் சோகம்



உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் அகதிகள் இறப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள் நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது.

இந்நிலையில், கிரீஸ் நாட்டில் நுழைவதற்காக மத்திய தரைக் கடல் வழியாக இறப்பர் படகுகளில் நேற்று முன்தினம் பயணம் செய்தவர்களின படகு சமோஸ் தீவு அருகே வந்தபோது திடீரென நீரில் மூழ்கியது.

இந்த விபத்தில் 8 குழந்தைகள் உட்பட 12 பேர் நீரில் மூழ்கி உயிரிழுந்ததாக முதற்கட்டமாக கூறப்பட்டது. ஆனால உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து 25ஐ எட்டியுள்ளது. இதில் 10 குழந்தைகள் அடங்குவர்.

உயிரிழந்தவர்கள் எந்தெந்த நாடுகளை சேர்ந்தவர்கள் என்று இதுவரை உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. மீட்கப்பட்ட உடல்களை தவிர்த்து மீதமுள்ளவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. கிரீஸ் நாட்டை சேர்ந்த 2 கப்பல்களும், ஐரோப்பா எல்லை நிறுவனம் சார்பில் 2 கப்பல்களும் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றன.

ஐ.நா. அறிக்கையின்படி 46 ஆயிரம் அகதிகள் இதுவரை இந்த ஆண்டில் மட்டும் கிரீஸ் நாட்டிற்கு வந்துள்ளனர். அதில் சுமார் 200 பேர் விபத்தில் உயிரிழந்துள்ளனர். முன்னதாக கடந்த வாரம் கிரீஸ் கடலோர பகுதியில் ஏற்பட்ட இது போனற விபத்தில் சுமார் 44 பேர் உயிரிழுந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஏமனில் தாக்குதல் 8 பேர் உயிரிழப்பு



வளைகுடா நாடான ஏமனில் ஜனாதிபதி மாளிகை அருகில் நேற்று முன்தினம் மாலை நிகழ்த்தப்பட்ட தற்கொலைப்படை வெடிகுண்டு தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் இராணுவ வீரர்களும் பொதுமக்களும் உள்ளதாகவும் மேலும் 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் ஆளுநர் அய்தரஸ் அல்-ஜுபாய்தியை குறி வைத்து அவரது பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருந்த பாதுகாப்பு படையினர் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அந்த பகுதியில் அப்போது அல்-ஜுபாய்தி இல்லை என்று கூறப்பட்டது.

ஜுபாய்தி மீது தாக்குதல் நடத்துவதற்காக ஏற்கனவே இம்மாத தொடக்கத்தில் நடத்தப்பட்டது. இவருக்கு முன்பாக இருந்த ஜாபா சாட் கொல்லப்பட்டதை அடுத்து இவர் கடந்த டிசெம்பர் மாதம் பதவிக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

# சீனாவில் வசந்தகால விழா தொடங்கியது



சீனாவில் வசந்த கால விழாவை ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். அந்தவகையில் இவ்விழா தற்போது களைகட்ட தொடங்கியுள்ளது. ஆங்காங்கே கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதுடன் பொதுமக்களுக்கு வித்தியாசமான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. ஜெஜியாங் மாகாணத்தில் மக்கள் அதிகளவில் கூடும் பூங்கா ஒன்றில் அனைவரையும் கவரும் வகையில் போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

கண்ணாடி கூண்டுக்குள் சீன நோட்டுகளை சிதற விட்டுள்ளனர். சிதறி கிடக்கும் நோட்டுக்கள் காற்றில் பறக்கும். ஒரு நிமிடத்தில் அதிகளவில் பணத்தை பிடிப்பவர்களு




க்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த போட்டியில் ஏராளமானோர் ஆர்வமுடன் பங்கேற்றனர். (இ)

# கலிபோர்னியாவை புரட்டிய சூறாவளி

**அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வீசிய கடுமையான சூறாவளி, மழையால் பாதிக்கப்பட்ட பல வீடுகள் உடைந்து விழும் நிலையிலுள்ள அதிர்சசி வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.**

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள Pacifica என்ற பகுதியில் கடந்த் சில தினங்களாக El Nino எனப்பெயரிடப்பட்டு சூறாவளி வீசி அப்பகுதியையே புரட்டி போட்டுள்ளது. கடற்கரையின் ஓரமாக இருந்த பல வீடுகள் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இந்த இயற்கை சீற்றத்தால் கடற்கரை ஓரங்கள் தண்ணீரால் அரித்துச் செல்லப்பட்டன. கரைமீது இருக்கும் வீடுகள, எந்த நிமிடம் ஆற்றில் சரிந்து விழுமோ என்ற நிலையில் பெரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளன.



இப்பகுதியில் வசித்து வரும் Michael McHenry என்ற நபர் கூறுகையில், கடுமையான புயலின் காரணமாக இப்பகுதி பெரும் சேதம் அடைந்துள்ளது. வீட்டிற்கு சென்றுவிட்டு பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பக்கூட இயலவில்லை. தண்ணீர் கரையை அரித்துக் கொண்டு இருப்பதால் வீடுகள் எந்த நேரத்திலும் கீழே விழுந்து விடும் அபாயத்தில் இருக்கிறது என அச்சம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் சூழ்நிலை ஆபத்து வாய்ந்ததாக உள்ளதால் உடனடியாக அனைவரும் வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

மேலும், பொலிஸாரின் உத்தரவை மீறி பாதிப்புக்குள்ளான வீடுகளில் தங்கியுள்ளவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதியப்படும் எனவும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)



# கண்ணிவெடியில் சிக்கிய 7 பொலிஸார் உயிரிழப்பு

ஜார்கண்ட் மாநில பொலிஸார் கடந்த புதன்கிழமை காலபாகர் பகுதியில் வழக்கமான ரோந்து பணியை முடித்துவிட்டு, பின்னர் மாலையில் ஹுசைனாபாத்துக்கு திரும்பி கொண்டிருந்தனர். அப்போது பலாமு மாவட்டத்துக்குட்பட்ட மகுவாதந்த் ஜாப்லா வீதியில் சென்று கொண்டிருந்த போது மவோயிஸ்டுகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் பொலிஸாரின் வாகனங்கள் சிக்கின.

இந்த சம்பவத்தில் பொலிஸார் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தனர். மேலும் 8 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் இருந்து மேலும் பொலிஸார் 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. இதனால் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்து உள்ளது. அந்த பகுதி பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. (இ)

## ஐதரசன் குண்டுச் சோதனையையடுத்து தொலைதூர

# ஏவுகணை சோதனைக்கு தயாராகிறது வடகொரியா

உலக நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், அணு ஆயுத பரவலுக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகள் ஆகியவற்றுக்கு மாறாக வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத திட்டங்களை நிறை வேற்றி வருகிறது.

3 முறை அணுகுண்டு சோதனை நடத்தியுள்ள அந்த நாடு, கடந்த 6ஆம் திகதி ஐதரசன் குண்டினை வெற்றிகரமாக சோதித்துள்ளதாக அறிவித்தது. இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

வடகொரியா ஏற்கனவே மேற்கொண்ட அணுகுண்டு சோதனை, ஏவுகணை சோதனைகளுக்காக அந்த நாட்டின்மீது ஐ.நா. பாதுகாப்பு சபை பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

அண்மையில் ஐதரசன் குண்டு வெடித்து சோதித்துள்ள வடகொரியா மீது புதிய பொருளாதார தடைகளை விதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை பரிசீலித்து வருகிறது. இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் வருகிறபோது, அதை ஆதரிப்பதற்கு அமெரிக்காவும் சீனாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

சீன வெளியுறவு அமைச்சர் வாங்யியை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி, பீஜிங்கில் 27 ஆம் திகதி சந்தித்து பேசிய போது, இந்த விவகாரம் குறித்து விவாதித்தனர்.

இந்த சந்திப்பை தொடர்ந்து நிருபர்களிடம் பேசிய ஜோன் கெரி, "வடகொரியா வெளிப்படையான அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. உலகுக்கு பிரகடனம் செய்யப்பட்ட அச்சுறுத்தலாக அந்த நாடு உள்ளது. வடகொரியா தனது அணு ஆயுத, ஏவுகணை திட்டங்களை செயற்படுத்துவதை தடுக்கிற விதத்தில், ஐ.நா. தீர்மானம் கொண்டு வர உத்வேகத்துடன் முயற்சி செய்ய உள்ளோம்" என கூறினார்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி, "வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபை மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என இரு தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளோம். இதுதொடர்பாக புதிய தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

இதற்கிடையே உலக நாடுகளுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்துகிற வகையில், நீண்ட தூர ஏவுகணை ஒன்றை சோதித்து பார்ப்பதற்கான நடவடிக்கைகளில் வடகொரியா இறங்கி உள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஒரு வார காலத்தில் இந்த சோதனையை அந்த நாடு மேற்கொள்ளும் என ஜப்பான் கியோடோ செய்தி நிறுவனம் கூறுகிறது.

இது தொடர்பாக வடகொரியாவின் டாங்சாங்ரி ஏவுகணை சோதனை மையத்தில் வேலைகள் நடந்து வருவது செயற்கைக்கோள் படம் மூலம் தெரிய வந்துள்ளது.

வடகொரியா ஏற்கனவே கடந்த 2012ஆம் ஆண்டு தொலைதூர ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தி உள்ளது. இப்போது மீண்டும் அத்தகைய சோதனைக்கு அந்த நாடு தயார் ஆகி வருவதாக தகவல் வெளியாகி இருப்பது உலக அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ)

## 70 முதலைகளை கடத்தியவர் கைது

உறைந்த நிலையிலான 70 முதலைகளை கடத்திச் சென்ற நபர் ஒருவரை சீன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வியட்நாமிய எல்லைக்கு அருகில, ஃபான்செங்காங் எனும் இடத்தில் வாகன சோதனைகளில் ஈடுபட்டிருந்த சீன பொலிஸார் தற்செயலாக லொறியொன்றை நிறுத்தி சோதனையிட்டபோது இம் முதலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி லொறியில் என்ன வகையான பொருட்கள் என பொலிஸார் விசாரித்தபோது, லொறியின் சாரதி கூறிய பதிலும் லொறியிலுள்ள பொருட்களுக்கும் முரண்பாடானவையாக இருந்தன.

பின்னர் அந்த லொறியை சோதனையிட்டபோது அதற்குள் உறைந்த நிலையில் 70 முதலைகளும் மேலும் 88 முதலைகளின் வால்களும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்து மேற்படி முதலைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சியாமிஸ் ரகத்தைச் சேர்ந்த இம் முதலைகள் வியட்நாம் இந்தோனேஷியா, புருணை, மலேஷியாவின கிழக்குப் பிராந்தியம், லாவோஸ, கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.(இ)

## மீனவர்கள் போராட்ட அறிவிப்பு 144 தடை உத்தரவு பிறப்பிப்பு

இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 7 பேரையும், அந்நாட்டு கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட 76 படகுகளையும் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி கடந்த திங்கட்கிழமை முதல் நாகை, காரைக்கால், திருவாரூர், தஞ்சை, ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி நேற்று அவர்கள் காரைக்கால் தனியார் துறைமுகத்தை முற்றுகையிட ஆயத்தம் ஆகியுள்ள நிலையில் மாவட்ட நிர்வாகம் 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.


இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்ட 7 மீனவர்களையும், அதுமட்டுமல்லாமல் 76 படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 30 ஆண்டுக ளாக மீனவர்கள் போராடி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்திற்கு அறிவித்திருந்தனர். குடியரசு தினத்தன்று அடையாள உண்ணாவிரதமும் மேற்கொண்டார்கள். இருப்பினும் தமிழக அரசோ, மத்திய அரசோ ஏன் என்ற கேள்விகள் எழுப்பவில்லை, என்ன வேண்டும் என்றுகூட கேட்கவில்லை என்பது மீனவர்களுடைய குற்றச்சாட்டாக உள்ளது.

நேற்று காரைக்கால் தனியார் துறைமுகத்தை 6 மாவட்ட மீனவர்களும் முற்றுகையிட போவதாக அறிவித்திருந்தனர். (இ)

## குடையில் பிரமாண்டம்

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தைச் சேர்ந்த ஒரு குடை தயாரிப்பு நிறுவனம், 23 மீற்றர் விட்டமும், 14.4 மீற்றர் உயரமும் கொண்ட பிரமாண்ட குடையை உருவாக்கியுள்ளது. இந்த ராட்சத குடை சுமார் 5,700 கிலோ எடையுடன், 418 சதுர மீற்றர் பரப்பளவை மறைத்தபடி காட்சியளிக்கிறது என்பதே, குடையின் பிரமாண்டத்தை உணர்த்தும்.



இதனை கின்னஸ் அமைப்பினரிடம் சீன பிரதிநிதிகள் பிரபலப்படுத்த கின்னஸ் சாதனையும் கிடைத்துவிட்டது. தற்போது சீனாவில் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்த சாதனையை, 2010ஆம் ஆண்டிலேயே இந்தியா நிகழ்த்திக் காட்டிவிட்டது குறிப்பிடத்தக்கது. 17.06 மீற்றர் விட்டம், 10.97 மீற்றர் உயரம் கொண்ட பிரமாண்ட குடையை இந்தியர்கள் எளிதாக விரித்து மடக்கும் வகையிலேயே தயாரித்திருந்தனர். அதையும் கின்னஸ் அமைப்பு உலக சாதனையாக அறிவித்திருந்தது. (இ)

## 30 அடி திமிங்கலம் கரையொதுங்கியது



மும்பையில் ஜுஹு கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு 30 அடி நீள திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது. இரவு 10 மணியளவில் திமிங்கலம் கரை ஒதுங்கியதை கண்ட உள்ளூர் மக்கள் வனத்துறைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து விரைந்து வந்த அதிகாரிகள் இறந்த திமிங்கலத்தை ஆய்வு செய்து வருகின்றனர்.

இரண்டு தினங்களுக்கு முன்னரே திமிங்கலம் இறந்து இருக்க கூடும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். திமிங்கலத்தை அகற்றுவதற்காக கிரேன் வரவழைக்கப்பட்டுள்ளது.

இம்மாத முற்பகுதியில் தமிழ் நாட்டின் தூத்துக்குடி அருகே உள்ள திருச்செந்தூர் பகுதி கடற்கரையையொட்டிய இடங்களில் 50-க்கும் மேற்பட்ட திமிலங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியது குறிப்பிடத்தக்கது. (இ)

## இங்கிலாந்தில் 18 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டதாக மிரட்டல்

இங்கிலூந்தில் லண்டன் மற்றும் மேற்கு மிட்லேண்ட் உள்ளிட்ட நகரங்களில் உள்ள 18 பாடசாலைகளில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டின் நேரப்படி காலை 8 மணியளவில் பாடசாலைகளுக்கு இந்த வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அங்கிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் உடனடியாக பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

இதேபோன்ற வெடிகுண்டு மிரட்டல் கடந்த செவ்வாய்க்கிழமை இங்கிலாந்து நாட்டின் 14 பாடசாலைகளுக்கு விடப்பட்டன. ஆனால் அது வெறும் புரளி என பின்னர் தெரியவந்தது.

இந்நிலையில், பொலிஸார் பாடசாலைகளில் சோதனையிட்டனர். இந்த மிரட்டல் விடுத்த மர்ம நபர்களை தேடும் பணியிலும் பொலிஸார் ஈடுபட்டனர்.

இந்த வாரத்தில் 3வது முறையாக இங்கிலாந்து நாட்டு பாடசாலைகளுக்கு விடப்பட்டுள்ள வெடிகுண்டு மிரட்டல் இதுவாகும். கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கு மிட்லேண்டில் உள்ள 4 பாடசாலைகளுக்கு மிரட்டல் விடப்பட்ட்து. அதன்பின் லண்டன் மற்றும் மேற்கு மிட்லேண்ட் நகரங்களில் உள்ள தலா 4 பாடசாலைகளுக்கும் மற்றும் கார்ன்வால் நகரத்தின் 4 பாடசாலைகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள பாடசாலைகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டுள்ளது. இந்நிலையில் இங்கிலாந்தில் லண்டன் மற்றும் மேற்கு மிட்லேண்ட் உள்ளிட்ட நகரங்களை இலக்காக கொண்டு குறைந்தது 18 பாடசாலைகளுக்கு மிரட்டல் விடப்பட்டுள்ளது. இந்த மிரட்டல்கள் போலியானவை என பொலிஸார் கூறியுள்ளனர். (இ)

# உலக சந்தையில் விலை குறைந்ததன் அனுகூலம் இலங்கைக்கு கிட்டுமா?

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்பை வலுப்படுத்தவும், உலக சந்தையில் எண்ணெய் விலை குறைவடைந்தமைக்கான அனுகூலத்தை, இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கவும் தான் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக, புதிய ஈரான் தூதுவர் மொஹமட் செய்ரி அம்ரானி தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சர் றிசாத் பதியுதீனை சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை மற்றும் ஈரான் நீண்ட காலமாக நண்பர்கள். ஈரான் கடினமான காலகட்டத்துக்கு முகம் கொடுத்திருந்த வேளைகூட, இலங்கை தனது நட்பிலிருந்து ஒதுங்காமல் தொடர்ந்தும் நல்ல உறவிலிருந்தது என இதன்போது மொஹமட் செய்ரி அம்ரானி மேலும் சுட்டிக்காட்டினார்.

இதற்காக ஈரான் மக்களின் நன்றி இலங்கைக்கு உரித்தாகும். இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதி 2011 ஆம் ஆண்டு 1.6 பில்லியன் அமெரிக்க டொலர். எனினும் துரதிஸ்டவசமாக அது 2014 ஆம் ஆண்டு 188 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

மீண்டும் மிக விரைவில் ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையில் இருதரப்பு வர்த்தகத்தை முன்னரை விட முன்னேற்றகரமான மட்டத்துககு கொண்டு செல்ல இரு நாடுகளும் மிக அர்ப்பணிப்பும் முயற்சியும் மேற்கொள்கின்றன எனவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, ஈரான முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 29.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.06 | 146.10 |
| பவுண்ட் | பிரிட்டன் | 203.16 | 210.40 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 154.35 | 160.55 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 139.15 | 144.97 |
| டொலர் | கனடா | 100.55 | 104.67 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.81 | 104.55 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.14 | 102.97 |
| ரூபா | இந்தியா | 2.1132 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.2344 |
| குவைத் | டினார் | 473.9694 |
| ஓமான் | ரியால் | 373.7717 |
| கட்டார் | ரியால் | 39.5381 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3743 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1888 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 110 | 150 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 | 400 |
| தக்காளி | 80 | 60 | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 45 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 90 | 100 | 120 | 80 |
| கரட் | 200 | 150 | 180-300 | 200 | 200 |
| பூசணி | 50 | 45 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 80 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 80 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 70 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 220 | 250 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 800 | — | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | — | 120 | 140 |
| கீரை – 1 பிடி | 40 | 35 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 40 | 140 | 50 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 120 | 100 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 80 | 120 | 120 |
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 50 | — | 80 | 100 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணம் சென்ற ரெயிலை நிறுத்தி 100 தமிழர்கள் சுட்டுக்கொலை 92

...இதைத் தொடர்ந்து இலங்கையின் கிழக்குப் பகுதியில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் ஒரு கிராமத்திற்குள் கத்தி, கம்பு போன்ற ஆயுதங்களுடன் சிங்களவர்கள் நுழைந்தனர். கண்ணில் பட்ட தமிழர்களையெல்லாம் அடித்துக் கொல்லும் வெறியுடன் அவர்கள் சென்றனர். அந்தக் கிராமத்தில் இருந்த 10 வீடுகளில் நுழைந்தனர். அங்கிருந்த 40 தமிழர்களைக் கத்தியால் குத்தியும் அடித்தும் கொன்றனர்.

**போர் நிறுத்த ஒப்பந்தம்**

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண பூட்டான் நாட்டுத் தலைநகரான திம்புவில் சமரசப்பேச்சுவார்த்தை நடப்பதையொட்டி இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்தப் போர் நிறுத்தம் ஜூன் 18 ஆம் திகதி முதல் அமலுக்கு வந்தது. இருதரப்பினரும் 18 வார காலம் எந்த வித வன்முறையிலும் ஈடுபடுவதில்லை என்று உடன்பாடு செய்துகொண்டனர்.

இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் சிங்கள இராணுவம் பலமுறை மீறி விடுதலைப்புலிகள் மீதும் அப்பாவித் தமிழர்கள் மீதும் தாக்குதலை நடத்தியது. யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில், விடுதலைப்புலிகள் நோட்டீஸ்களை ஒட்டிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் மீது கடற்படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

உடனே விடுதலைப்புலிகள் அவர்கள் மீது வெடிகுண்டுகளை வீசி விட்டுத் தப்பி ஓடிவிட்டனர். கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் அங்குள்ள பஸ் நிலையத்தில் நின்ற 4 பேர் மீது குண்டு பாய்ந்தது. இதில் 2 பேர் செத்தனர். 2 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மட்டக்களப்பு அருகே கொட்டியாவலை என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற 2 தமிழ் இளைஞர்களைப் பொலிஸ் துப்பாக்கியால் சுட்டனர். இதில் பயாஸ் என்ற வாலிபர் காயம் அடைந்ததால் பொலிசாரிடம் சிக்கினார். மற்றவர் தப்பிச் சென்றார். பொலிசார் பயாசைக் கண்மூடித்தனமாக அடித்துக் கொலை செய்தனர்.

இது குறித்து விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு தலைவர் சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சமரசப் பேச்சு நடக்கும் இந்த நேரத்தில் இலங்கை இராணுவமும் பொலிசாரும் மக்களை மிரட்டி தமிழர் பகுதிகளில் பதற்ற நிலையை உருவாக்கி வருகிறார்கள். இது இலங்கை அரசு அரசியல் ரீதியில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பவில்லை என்பதைத் தான் காட்டுகிறது. இது போன்ற வன்முறைச் செயலில் இராணுவம் தொடர்ந்து ஈடுபட்டால் விடுதலைப்புலிகள் பதிலடி கொடுப்பார்கள் என்று கூறப்பட்டிருந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று விரும்பிய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகள் உட்பட பல்வேறு போராட்டக்குழுக்களுக்கும் இடையேயான சமரசப் பேச்சு பூட்டான் தலைநகரான திம்புவில் 1985 ஜூலை 8 ஆம் திகதி ராஜீவ் முயற்சியால் நடந்தது.

**ஜெயவர்த்தனவின் தம்பி**

இந்தச் சமரசப் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அதிபர் ஜெயவர்த்தனவின் தம்பியும் சட்ட நிபுணருமான ஹெக்டர் ஜெயவர்த்தனா உட்பட 10 பேர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழர்களுக்கான கட்சிகளில் பெரிய கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், நிர்வாகத்தலைவர் என்.சிவசிதம்பரம், ஆர்.என். சம்பந்தன் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கெடுத்துக்கொண்டனர்.

**விடுதலைப்புலிகள்**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ) இயக்கத்தலைவர் பிரபாகரன் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. இதே போல் தமிழ் ஈழ விடுதலை இயக்க (டெலோ) தலைவர் சிறிசபாரத்னம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் பத்மநாபன், ஈழப்புரட்சி அமைப்பு (ஈராஸ்) தலைவர் பாலகுமார் ஆகியோரும் பங்கு கொள்ளவில்லை.

ஆனால், இந்த இயக்கங்களின் சார்பில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அவர்கள் ' விபரம் வருமாறு:-

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம்:- கதிரேசன், வரதராஜ பெருமாள்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்:- சார்லஸ், மோகன்.

ஈழப்புரட்சி அமைப்பு:- சங்கர் ரத்தினசபாபதி.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:- டி.சித்தார்த் தன், வாசுதேவா.

நன்றி

சமரசப்பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் செய்துள்ள பூட்டான் மன்னருக்கும் பூட்டான் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசு பிரதிநிதிகளும் இலங்கை தமிழர் பிரதிநிதிகளும் நன்றி தெரிவித்தனர்.



(தொடரும்)

# மனித உரிமைகளை காக்கத் தவறிவிட்டது உச்ச நீதிமன்றம்

## பொதுநலவாய அமைப்பிடம் முறையீடு

(கொழும்பு)

**மனிதவுரிமைகளைக் காப்பதற்கு இலங்கை உச்ச நீதிமன்றம் தவறிவிட்டதாக சிவில் அமைப்பொன்று முறைப்பாடு செய்துள்ளது. சட்டம் மற்றும் நியாயத்தை காக்கும் அமைப்பின் தலைவரான சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு என்பவரே பொதுநலவாய அமைப்பிடம் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.**

பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டபோது கூட இலங்கை உச்சநீதிமன்றம் அவற்றை விரிவாக விசாரணை செய்ய தவறியதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதனாலேயே இலங்கையில் சர்வதேச நீதிபதிகளை கொண்ட விசாரணைக்கு கோரப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை இலங்கை விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிப்பதை தான் எதிர்ப்பதாக கூறியுள்ளார்.

ஆனால், உச்சநீதிமன்றம் உட்பட நீதித்துறை கட்டமைப்பின் சுதந்திரத்தை காக்குமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்க உப தலைவரான சாலிய பீரிஸ், கடந்த காலங்களில் இலங்கை நீதிமன்றங்கள் முக்கியமான பல தீர்ப்புக்களை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

சர்வதேச நீதிபதிகள் திட்டத்தை நிராகரித்த அவர், நீதிமன்ற சுதந்திரம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கம் கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக நீதிமன்ற சுதந்திரத்தை காப்பதாக வாக்குறுதிகளை வழங்கியது.

ஆனால் இன்று அந்த வாக்குறுதி மீறப்பட் டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பிரதமருடன் சுவிஸ் சென்றவர்களுக்கான செலவை வெளியிட கோருகிறார் தினேஷ்

சுவிட்சர்லாந்தின் டாவோஸ நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமருடன் இலங்கையில் இருந்து சென்ற 40 பேருக்கு தினமும் எவ்வளவு பணம் செலவானது என்பதை வெளியிடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.



நாடு பாரதூரமான பொருளாதார மற்றும் நிதி தொடர்பிலான பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.

மேற்குலக முதலீட்டாளர்கள் வரவில்லை என்பதால், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித்திட்டத்தை மீண்டும் செயற்படுத்த அரசாங்கம் சீனாவின் முன் மண்டியிட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் ஆரம்பித்த இந்த திட்டத்தை புதிய அரசாங்கம் 10 மாதங்களுக்கு முன்னர் நிறுத்தியது எனவும் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (இ)

## சரத் பொன்சேகா எம்.பியாக வேண்டும்

சரத் பொன்சேகாவிற்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள், படைவீரர்கள் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர். முன்னாள் அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்தனவின் மறைவினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு, சரத் பொன்சேகாவை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குணவர்தன கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியன் சாற்பில் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் தெரிவாகியிருந்தார். குணவர்தனவின் மறைவினால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமும், தேசிய அரசாங்க அமைச்சரவை அமைச்சுப் பதவியொன்றும் வெற்றிடமாகியுள்ளது.

இந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவது குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் கலந்தாலோசித்து இறுதித் தீர்மானம் எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரமளவில் பதவி வெற்றிடம் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## ஞானசாரருக்கு பிணை மறுக்கப்பட்டதை எதிர்த்து சிஹல ராவய கடும் நடவடிக்கை

(கொழும்பு)

ஞானசார தேரருக்கு பிணை வழங்கப்படாமை தொடர்பில், தீவிரமான நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகுமாறு சிஹல ராவய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சிஹல ராவயவின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஹோமாகம நீதிமன்ற வளவில் வெளியிட்ட கருத்துக்காக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அவரை பிணையில் எடுக்க தாக்கல் செய்யப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து கருத்துரைத்துள்ள அக்மீமன தயாரட்ன தேரர் நீதிமன்றத்துக்கு கல்லெறிந்த அமைச்சா றிசாத் பதியுதீனுக்கு பிணை வழங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்காவுக்கு பிணை வழங்கப்பட்டது. எனினும் போரில் வெற்றியை பெற்றுக் கொடுத்த படைவீரர்களுக்காக பேசிய ஞானசார தேரருககு பிணை வழங்கப்படாமை வேதனைக்குரியது என்று தேரர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### இடையிலே இருப்பவர்கள்

ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் தவறாகச் சொல்லாதீர். அது நிச்சயம் பாதிக்கப்படுபவருக்குத் தெரியவரும். ஒருவரைப் பற்றி நீங்கள் தவறாகக் கூறலாம். ஆனால், சம்பந்தப்பட்ட அதே நபர் அந்த இடத்தில் இருக்கும் போது அதைக்கூறுமளவிற்கு உங்களுக்குத் தைரியம் இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு இடையிலே இருப்பவர்களிடம் கூறுவது கோழைத்தனம்.

இடையிலே இருப்பவர்களை நாம் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமக்கும் மற்றவர்களுக்கும் இடையே தொடர்புக் கருவியாக இருப்பவர்களை நாம் அப்படிப் பயன்படுத்திக் கொண்டோமானால் நாம் நிறைந்த பயன்களைப் பெற்றவர்களாவோம்.

நாம் சாதாரணமாக ஒன்றைச் சொன்னால் கூட அதைப் பிரமாதப்படுத்தி,ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்லி உறவைக் கெடுப்பார்கள்.

நீங்கள் யாரிடம் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்புகிறீர்களோ, யாரோடு உறவைப் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களோ அவர்களுக்கும் உங்களுக்கும் வேண்டியவரை இடையிலே இருப்பவரை பிடியுங்கள். அவரையும் முன்னவரையும் பற்றிப் பிரமாதமாகச் சொல்லுங்கள். இடையிலே இருப்பவர் இந்தச் செய்தியைப் பிரமாதப்படுத்தி அவரிடம் சொல்லுவார். பாராட்டுகளை ஒருவர் நேரடியாகச் சொல்வதை விட இடையிலே இருப்பவர் மூலம் தெரியப்படுத்துவதற்குத் தான் வலிமை அதிகம்.

உங்களுக்கு மிக வேண்டியவர் ஒருவர் ஓர் உதவியைக் கேட்டிருப்பார். நீங்களோ உங்கள் இயலாமையைப் பக்குவமாகத் தெரிவித்திருப்பீர்கள். ஆனால், இடையிலிருப்பவரோ அவர் தரமுடியாது என்று சொல்லி விட்டார் என்று சொல்லி, உங்களிடையே இருக்கும் உறவைக் கெடுத்து விடுவார்.

இடையிலே இருப்பவர் படிக்காதவராகவும், வார்த்தைகளைத் திரித்துக் கூறுபவராகவும் இருப்பவர் என உங்கள் மனதிற்குட்பட்டால், தெரிவிக்க வேண்டிய வார்த்தைகள் என்ன என்பதைச் சிறு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைப் போல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுங்கள். அதைக் கூடச் சொல்வதற்கு அவர் அருகதை அற்றவர் என்றால் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

ஒருவரது அன்பையும் உறவையும் நீங்கள் முழுமையாகப் பெறவேண்டுமானால் அவர்கள் குறைகளை நேரடியாகச் சுட்டிக் காட்ட வேண்டும். ஆனால், இப்போது இதே செயல்கள் தலைகீழாக நடக்கின்றன. அதாவது நேரடியாகப் புகழ்வது; மற்றவர்களிடம் திட்டுவது இது சற்றும் சரிப்பட்டுவராத செயல்.

இதை மாற்றிக் கொண்டால் வியக்கத்தக்க பலன்கள் கிடைக்கும்!

லேனா தமிழ்வாணன்

## சட்டமா அதிபர் பதவி வெற்றிடத்திற்கு ஜனாதிபதி இன்னும் எவரையும் பரிந்துரை செய்யவில்லை

சட்டமா அதிபர் பதவி வெற்றிடத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் எவரையும் பரிந்துரை செய்யவில்லை என அரசியல் அமைப்புச் சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் பரிந்துரையின் அடிப்படையில் அரசியல் அமைப்புச் சபையினால் சட்டமா அதிபர் பதவி வெற்றிடம் நிரப்பப்படும் என்பது குறிபபிடத்தக்கது. சட்டமா அதிபராக கடமையாற்றி வந்த யுவான்ஜித் விஜேரட்ன கடந்த 9ஆம் திகதி ஓய்வு பெற்றுக் கொண்டார். இந்த வெற்றிடத்திற்கு தற்காலிக அடிப்படையில் இரண்டு வாரத்திற்கு பதில சட்டமா அதிபராக சுஹத கம்லத் நியமிக்கப்பட்டார்.

சுஹத கம்லத்தின் பதவிக் காலம் பூர்த்தியான நிலையில் பதில் சட்டமா அதிபர் பதவியை மேலும் இரண்டு வாரங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீடிதது ள்ளதாக நீதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெற்றிடமாகியுள்ள சட்டமா அதிபர் பதவிக்கு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஒரு தரப்பினரும், திணைக்களத்திற்கு வெளியே ஒருவரை நியமிக்குமாறு மற்றுமொரு தரப்பினரும் யோசனை முன்வைத்துள்ளனர்.

தற்போது பதில் சட்டமா அதிபராக கடமையாற்றி வரும் சுஹத கம்லத் அமைச்சு ஒன்றின் செயலாளராக நிய மிக்கப படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. எவ்வாறெனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் விரைவில் சட்டமா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவிப்பதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)



# சிறுவர் அரங்கம்

1347

## பாலம் – காசு!

பாளையத்தூர் என்ற ஆற்றின் வடக்குக் கரையில் கொள்ளக்குடி என்ற ஊர் இருந்தது. அதன் தெற்குக் கரையில் மேட்டுக்குடி என்ற ஊர் இருந்தது. இரண்டு ஊர்களிலும் ஏராள மான மக்கள் வாழ் ந்து வந்தனர்.

அந்த ஆற்றில் எப்போதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருந் தது. இரண்டு ஊர் மக்களும் ஆற்றை கடக்க படகு வழி யாகவே சென்றனர்.


மழைக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடும். படகில்கூட யாரும் இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்ல முடியாது. அதனால் இரண்டு ஊர் மக் களும் மிகுந்த துன்பப்பட்டனர்.

இதற்கு எப்படித் தீர்வு காண்பது என்று இரண்டு ஊர் மக்களும் கூடி ஆலோசித்த னர்.

ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது என்று முடிவு செய்த னர். அதன்படியே பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

அந்தப் பாலத்தைப் பாது காக்க காவலாளி ஒருவரை அவர்கள் நியமித்தனர்.

"பாலத்தைக் கடந்து செல்ப வர்களிடம் நீ ஒரு பணம் கூலி பெற்றுக் கொள்ளலாம்," என்று காவலாளியிடம் சொன்னார் கள்.



கொள்ளக்குடி கரையில் பால த்தை ஒட்டி குடிசை போட்டு தங்கினான்.

"இந்த பாலத்தைக் கடக்க எப்படியும் இருபது நிமிடம் ஆகும். அதனால் நான் எப் போதும் காவல் காக்க வேண் டாம். பத்து நிமிடத்திற்கு ஒரு முறை குடிசையை விட்டு வந் தால் போதும்.

"கொள்ளக்குடியிலிருந்து வருபவர்களும், மேட்டுக்குடி யில் இருந்து செல்பவர்களும் பாலத்தின் நடுவே என் கண் ணில்படுவர். நான் ஓடிச் சென்று அவர்களிடம் கூலியை வாங்கிக் கொள்வேன். பணம் தராவிட்டால் திருப்பி அனுப்பி விடுவேன். என்னை யாரும் ஏமாற்ற முடியாது" என்று நினைத்தான்.

அதன்படியே அவன் குடி சையை விட்டுப் பத்து நிமிடத் திற்கு ஒருமுறை வெளியே வந்தான். பாலத்தில் செல்ப வர்களிடம் பணம் வசூலித் தான்.

அவன் அப்படிச் செய்வது பாலத்தில் செல்லும் எல்லாருக்கும் தெரிந் தது.

கொள்ளக்குடி இளைஞன் ஒருவன் மேட்டுக்குடி வந்தான். தன் நண்பனிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தான். ஊர் திரும்ப நினைத்த அவன் பாலத்தின் அருகே வந்தான்.

"தன்னிடம் பணம் இல்லை என்பது அவனுக்குத் தெரிந் தது. காவலாளி தன்னைத் திருப்பி அனுப்பி விடுவானே... பணம் தராமல் எப்படி பாலத் தைக் கடப்பது?" என்று சிந்தித் தான் அவன். நல்லவழி ஒன்று அவனுக் குத் தோன்றியது.

காவலாளிக்குப் பணம் தராமலே பாலத்தைக் கடந் தான் அவன். காவலாளி பார்த் துக் கொண்டிருக்கும் போதே கொள்ளக் குடியை அடைந்தான்.

அப்படியானால் அவன் என்ன செய்திருப்பான்?

புதிர்கதையின் விடை: காவலாளி குடிசைக்குள் செல்வதைப் பார்த்தான் அவன். பாலத்தில் கொள்ளக் குடி நோக்கி வேகமாக நடந் தான்.

பத்து நிமிடம் ஆயிற்று. திரும்பிய அவன் மேட்டுக்குடி நோக்கிச் செல்பவன் போல மெல்ல நடந்தான். அவன் மேட்டுக்குடி செல்கிறான் என்று நினைத்த காவலாளி ஓடி வந்து அவனை மடக்கினான்.

அவனிடம் பணம் இல்லை என்பதை அறிந்து "கொள்ளக் குடிக்கு போ" என்று அவனைத் திருப்பி அனுப்பினான். எப்புடி!

01.2016
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன்பாடாகியது.
- 1649 - முதலாம் சார்ல்ஸ் மன்னன் தூக்கிலிடப் பட்டான.
- 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.
- 1649 - இளவரசர் சார்ல்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சாரல்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட் லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்ன னாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.
- 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதி யாக பதவியேற்றார்.
- 1948 - இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி இந்துத் தீவிரவாதியான நாதுராம் கோட்சேயினால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.
- 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிரு ந்து விலகியது.
- 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர் கள் 5 பேர் மட்டக்களப்பு, வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர்.

**பிறப்புகள்**


- 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32 ஆவது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ. 1945)
- 1910 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ. 2000)

**இறப்புகள்**

- 1948 - மகாத்மா காந்தி, (பி. 1869)
- 1874 - இராமலிங்க அடிகளார், ஆன்மிகவாதி (பி. 1823)

**சிறப்பு நாள்**

- இந்தியா - தியாகிகள் நாள்
- உலக தொழுநோய் ஒழிப்பு நாள்



### மோகனதாஸ் கரம்சந்த் காந்தி

**மகாத்மா காந்தி** என்று அன்புடன் அழைக கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தியதன் காரணமாக இவர் **"விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை"** என்று அழைக்கப்படுகிறார். **சத்தியாக்கிரகம** என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போரா ட்டம் இந்தியநாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் மற்ற சில நாட்டு விடு த்லை இயக்கங்களுக்கும் ஒரு வழி காட்டியாக அமைந்தது. இவரது பிறந்த நாள் இந்தியாவில் **காந்தி ஜெயந்தி** என்று கொண்டாடப்படுகிறது. இவரது 13 ஆவது வயதில் அக்கால வழக்கப்படி கஸ்தூரிபாய் என்ற பெண்ணை பெற்றோர் பால்ய விவாகம் செய்து வைத்தனர். இவர் பின்னர் தனது 18 ஆம் வயதில் இங்கிலாந்து சென்று கல்விகற்று **பரிஸ்டர்** எனப்படும வழக்குரைஞர் பட்டம் பெற்றார். பகவத்கீதை, சமண சமய கொள்கைகள், லியோ டால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட காந்தி, சத்தியம், அகிம்சை ஆகிய கொள்கைகளை தன் வாழ்நாள் முழுவதும் விடாமல் கடைபிடித்தார். வாரத்திற்கு ஒருநாள் மௌன விரதம் மேற் கொள்வார். காந்திக்கு **"மகாத்மா"** என்னும் பட்டம் அளித்தவர் **இரவீந்திரநாத் தாகூர்.** காந்தி குஜராத்தி மொழியில் எழுதிய சுயசரிதை, **சத்திய சோதனை** என்ற பெயரில் தமிழ் மொழியிலும் An Autobiography: The Story of My Experiments with Truth என்ற பெயரில் ஆங்கலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1947 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அன்று காந்தியைக் கொல்வதற்காக சதி முயற்சி இடம்பெற்றது. ஆனாலும் அன்று அவர் உயிர் பிழைத்தார். காந்தி இறப்பதற்கு முந்திய தினம் வியாழக்கிழமை அவர் அணு ஆயதங்களைப் பற்றி இந்திராகாந்தியிடம் கூறியது: "அணுகுண்டை ஒருங்கே அமெரிக்கா தவிர்க்க வேண்டும். அகிம்சா வழிப்போராட்டம் ஒன்றை மட்டும் அணுகுண்டுகளால் அழிக்க முடியாது! மற்றும் ஒரு சமயம் அகிம்சா இயக்கம் ஒன்று தான் மனித இனத்தின் கைவசமுள்ள மாபெரும சக்தி பெற்ற ஓர் ஆயுதம். பேரழிவுச் சக்தியுடைய எந்த யுத்த ஆயுதத்தையும் விட பெரியது அது!" என்று சொல்லியிருக்கிறார். அடுத்த தடவை ஜனவரி 30 ஆம் திகதி மாலை ஆப்தே, **கோட்சே** இருவரும் கைத் துப்பாக்கியை மறைத்துக்கொண்டு, காந்தியின் பிராத்தனை மைதானத்தில் நடமாடிக்கொண்டிருந்தனர். அன்று கோட்சே வெற்றி அடைந்தான். காந்தியைக் கொன்ற சதிகார னாய்ச் சரித்திரத்தில் இடம்பெற்றான். 1948 மே 27 ஆம் திகதி **நாதூரம் கோட்சே,** ஆப்தே இருவரும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு நவம்பர் 15 ஆம் திகதி துக்கிலிடப்பட்டனர்.

# சுதந்திரக் கட்சியின் பிளவு நெருக்கடியை ஏற்படுத்தும்

## டியூ.குணசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவு நாட்டிற்குள் அரசியல் நெருக்கடியொன்றை ஏற்படுத்தி விடும் என்று முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகர எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பாக சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,



தற்போது இலங்கையில் சமூக, அரசியல் , பொருளாதார நெருக்கடியொன்று உருவாகிக் கொண்டு வருகின்றது. இதுகுறித்து இடதுசாரிக் கட்சிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

நாட்டில் பெரும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் எதிர்கால சந்ததியினர் பெரும் அபாயத்தை எதிர் நோக்க நேரிடும். இந்த விடயங்கள் குறித்து நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியுடன் தான் கலந்துரையாட வேண்டும்.

இவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது மைத்திரி அணி, மகிந்த அணி என்று இரண்டாகப் பிளவுபட்டால் நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடியொன்று ஏற்பட்டு விடும்.

இதனை தவிர்க்கும் முயற்சிகளில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். (இ)

## பாடசாலைகளில் பற்சிகிச்சைக்கு 250மில்லியன் ரூ.நிதியொதுக்கீடு

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்

பாடசாலைகளில் பற்சிகிச்சைகளை வழங்குவதற்கு முதற்கட்டமாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதற்கென நாடு தழுவிய ரீதியில் சில பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பற்சிகிச்சைகளை பாடசாலைகளில் வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் அதிகளவு மாணவர்களைக் கொண்டிருப்பதுடன், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் மற்றும் பற்கள் தொடர்பான பிரச்சினைகளால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக வட மத்திய மாகாணத்தைக் குறிப்பிட முடியும்.

ஒருசில மாணவர்கள் படிக்கின்ற பாடசாலைகளிலும் பற்சிகிச்சைகள் வழங்கக் கூடியதாக இருக்கும்.

சிறந்த உபகரணங்கள் மூலம் இந்தப் பற் சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன் இதனைத் தொடர்ந்து மேற்கொள்ள திறைசேரியிடம் மேலதிக நிதியை கோரவுள்ளோம். பாடசாலைகளில்வழங்கப்படும்பற்சிகிச்சைகள் மூலம் பரந்துபட்ட சேவைகள் பல ஆண்டுகளாக வழங்கப்படுகின்ற போதும் அவற்றில் முன்னேற்றம் காணப்படாமையினால் நிதி நெருக்கடி காரணமாக அவற்றில் சிலவற்றை நிறுத்த வேண்டி ஏற்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

## 'யாழ்ப்பாண நினைவுகள்' நூலின் பாகம்-2 திருமலையில் அறிமுகம்

சிவகாமி பதிப்பகத்தின் 14 ஆவது வெளியீடாக வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் என்ற நூலின் பாகம்-2 இற்கான அறிமுகவிழா நாளை மறுதினம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஜெசுவிற் ஆங்கில கலாசாலையில் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.


'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்வரவேற்புரையினை தம்பலகாமம் பிரதேச செயலக பண்பாட்டு அலுவலர் வி.குணபாலா வழங்கவுள்ளார்.

நூலாசிரியர் அறிமுகத்தை ஈச்சிலம்பற்று பூநகர் திருவள்ளுவர் வித்தியாலய அதிபர் பமதிபாலசிங்கம் நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரைகளை எழுத்தாளர் நந்தினி சேவியர், திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் திருமதி பிரகலா சுதர்சன், கவிஞர் ஸெல்வி தாசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டுரையினை திருகோணமலை மாவட்டச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஜனாப் ஏ.சி.எம். முஸ்இல் நிகழ்த்தவுள்ளதுடன் ஏற்புரையினை நூலாசிரியர் வேதநாயகன் தபேந்திரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 618


சுதர்சன் சுகி




விதுசன்





செல்வராஜ் ராகா




அழகேஸ் மீனு




தர்மசீலன்



அனுசியா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## கணவனை இழந்ததை விட பல மடங்கு வேதனை

# தலைவனை இழந்ததே!

## முன்னாள் போராளி துவாரகா



என் இனிய உறவுகளே, என்னை உங்களுக்கு தெரிகிறதா? எனது குரல் உங்களுக்கு கேட்கிறதா? மௌனித்து கை கால் கட்டப்பட்டு ஒரு கூண்டுப் பறவையாக இருந்த நான், எனது குரலை ஓங்கி ஒலிப்பதன் மூலமாவது உங்கள் உள்ளங்கள் தட்டி எழுப்பப்படுமா?

எமது மக்களிற்காகவும் மண்ணிற்காகவும் போராட புறப்பட்ட தன்மானமுள்ள ஒரு முன்னாள் பெண் போராளி நான்.

பல வருடங்களாக மக்களுக்கான மகத்தான பணியை செய்து வந்தவள் நான். எனது கணவரும் ஒரு விடுதலைப் போராளியாக இருந்து இந்த மண்ணிற்கான உன்னதமான பணியாற்றியவர். அதனால் எனது கணவரையும் இழந்து விட்டேன்.

**இந்நிலையில் எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு காரணம் எனக்கு உதவ வேண்டும் என்பதற்காகவல்ல. எமது தமிழ் மக்களுக்கான தீர்வுகள் பற்றி நடுநிலையாக சிந்தியுங்கள். உங்களால் முடிந்தவரை கணவரை யுத்தத்தில் இழந்த பெண்களுக்கு உதவுங்கள். அவர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுங்கள்.**

எமது தலைவனைப் பற்றியும் அவரின் உயர்ந்த பண்புகள் பற்றியும் எழுத தமிழில் உள்ள வார்த்தைகள் போதாது என்றே சொல்ல வேண்டும். எமது தலைவனின் காலத்தில் ஈழத்தில் பிச்சைக்காரரர்கள், அநாதைகள் கணவரை இழந்த பெண்கள் என எவரும் நாதியற்று இருக்கவில்லை.

எம் தலைவனை இழந்தோம் என்று ஒரு வரியில் சொல்லிவிட முடியாது. தமிழ் இனமே ஒப்பற்ற தலைவனை இழந்துவிட்டோம் என்று தான் சொல்ல வேண்டும். எனது கணவரை இழந்த வேதனையிலும் பல மடங்கு வேதனை எம் தமிழ்த் தலைவனை இழந்ததால் அடைந்தேன்.

எம் இனம் இன்று நாதியற்ற நிலையில் அல்லாடிக் கொண்டிருக்கின்றது. எம் தலைவனால் தமிழருக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பார்கள் என உருவாக்கப்பட்டு மிகப்பெரும் வெற்றியை ஈட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழருக்கு இதுவரை தீர்வுகள் எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

ஆனால் தமது கட்சிக்குள்ளேயே முறுகல் நிலையை உருவாக்கி ஒற்றுமையற்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. சில அரசியல்வாதிகள் சுயலாபம் கருதி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமக்குள்ளேயே நீயா நானா பெரிது என போட்டியிட்டு மக்களால் அமோக வாக்குக்களுடன் தெரிவு செய்யப்பட்டவர்களை வீழ்த்த வேண்டும் என முயற்சித்துக் கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

நான் பெரிது நீ பெரிது என்றில்லாமல் நாடு பெரிது என வாழுங்கள் என்று எம் தலைவன் அடிக்கடி கூறுவார். அந்த சிந்தனை இன்று அருகி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை பலப்பட வேண்டும். சில ஊடகங்களும் நடுநிலையற்ற தன்மையில் செயற்படுவதுடன் தனிப்பட்ட தமது நலனை கருத்தில் கொண்டு ஊடக தர்மத்தை மீறி தனிப்பட்ட நபர்களை உண்மைக்கு புறம்பாக விமர்சிப்பதும் கேவலப்படுத்துவதுமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உண்மைக்கு புறம்பான செய்திகளை திரிவுபடுத்தி எந்தவிதமான கூச்சமுமின்றி வெளியிடுகின்றன.

ஊடகங்கள் நடுநிலையற்று செயற்படுகின்றபோதும் மக்கள் நடுநிலையானவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை உணர ஊடகங்கள் தவறிவிடுகின்றன.

இவ்வாறான ஊடகங்களின் செயற்பாடுகளை நாம் கண்டிக்க வேண்டும். மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் அவர்களது உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும்தான் தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல்வாதிகளும் உரக்கக் குரல் கொடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தை சீர்குலைப்பதற்காக மக்களை பிழையான வழியில் வழிநடத்த முயலும் ஊடகங்களின் கருத்துக்கள் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தனிநபர்களை உண்மைக்கு புறம்பாக கொச்சைப்படுத்தும் ஊடகங்களை கண்டித்து குரல் கொடுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, தமிழ் மக்களின் முதலமைச்சர் இருவருமே எமது மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க தேவையானவர்கள்.

சம்பந்தன் ஐயாவிடம் அரசியல் நுணுக்கமும் நீண்ட அரசியல் வரலாறும் முதலமைச்சரிடம் நீதிநியாயமான தன்மையும் எவருக்கும் பேரம் போகாத தன்மையும் இருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இரண்டுமே எமக்கு தேவை. தமிழ்த் தேசியத்தை சிதைக்க எவரும் எவருக்கும் துணை போகாதீர்கள். தன்மானத் தமிழர்களாகிய நீங்கள், எவருக்கும் விலை போகாதீர்கள். பணத்திற்கும் சுகபோகத்திற்கும் ஆசைப்பட்டு விலைபோவதைவிட ஒவ்வொரு தமிழ் மகனும் தமது அடிப்படை உரிமைக்காகவாவது குரல் கொடுத்து அகிம்சை வழியில் போராடுவது மேலானது.

எமது உயிரைவிட மேலானது நன்மானம். தன்மானத்தை இழந்துவிடாதீர்கள்.

அது மாத்திரமின்றி இன்றைய எமது சமூகத்தில் கணவரை இழந்த பெண்கள் மிக முக்கிய பேசுபொருளாக இருக்கிறார்கள். கணவரை இழந்த ஒரு பெண்ணை எமது சமூகம் பரிதாபமாகவும் பரிகாசமாகவும் பார்ப்பது மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும்.

**கணவரை இழந்த பெண்களை எவரும் பரிதாபமாகவோ பரிகாசமாகவோ பார்க்காதீர்கள் என்பதே எனது தயவான வேணடுகோள். கணவரை இழந்த பெண்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை அரவணைத்து அவர்களுக்கு வழிகாட்டிவிட வேண்டிய மாபெரும் பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்கிறது.**

யுத்தம் என்கின்ற கொடிய அரக்கனால்தான் அநேகமான தமிழ்ப் பெண்கள் தமது வாழ்வை தொலைத்து நிற்கிறார்கள். இந்த நாதியற்று நிற்கும் பெண்களுக்கு கைகொடுங்கள். இன்றைய சமூகத்தில் ஒரு பெண் வேலை தேடி வெளியே செல்லும்போது சமூக பாதுகாப்பு கேள்விக் குறியாகவே உள்ளது.

ஏனெனில் விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியதால் பல பெண்கள் தமது கல்வியையும் சொத்து சுகங்களையும் இழந்திருந்தார்கள். இந்நிலையில் தானாக உழைத்து தன்னம்பிக்கையுடன் தனது சொந்தக்காலில் நிற்க ஒரு பெண் ஆயத்தமாகும் போதும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறாள்.

நம்பிக்கைக்குரிய, பாதுகாப்பிற்குரிய இடங்களாக அவள் எண்ணிச்சென்ற இடங்களிலேயே தமது சுயலாபம் கருதியே அவளுக்கு வேலைவாய்ப்பை கொடுக்க சில நிறுவனத்தினர் முனைகிறார்கள்.

அவ்வாறு வேலைக்கு சென்ற இடங்களில் அவர்களுடன் ஒத்திசைந்து ஒரு பெண் வேலை செய்யாவிடின் அவளை வெருட்டி கணவரை இழந்ததால் விசரி, விபச்சாரி என்ற தீய பட்டங்களை கொடுத்து சமூகத்தை நம்பவைக்க மாபெரும் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

**தன்மானத்துடன் வேலை செய்ய வேண்டும் என சென்ற பெண்களை அதாவது தன்மானத்தை இழக்காமல் துணிவுடன் எதிர்த்து போராடும் பெண்களை சில நிறுவனங்களில் ஆண் காவலாளிகளை கொண்டு விரட்டியடிக்கப்பட்டதை என் கண்கள் நேரடியாக கண்டன.**

**அவர்களது குடும்ப கௌரவத்தை அழிக்க முற்படுகிறார்கள். எனவே ஒரு கணவரை இழந்த பெண் நாதியற்று வாழும் போது வெருட்டப்பட்டு மௌனிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறாள்.** ஏனெனில் அவளது சுய கௌரவம் அவளுக்கு மேலாகிறது. ஒரு பெண் எழுத்தாற்றல் உள்ளவளாயின் அவளது சுதந்திரமான எழுத்துக்களைக் கூட எழுத முடியாமல் நசுக்கி விடுகிறார்கள்.

என் உறவுகளே இவை அனைத்தும் என் நேரடி அனுபவங்களே. இதனைவிட எழுத்தில் வடிக்கமுடியாத துன்ப துயரங்களை காலத்தின் கோலத்தில் என்றோ ஒருநாள் மனம் திறப்பேன்.

வெளிநாடுகளிற்கு செல்லக் கூடிய வாய்ப்புக்கள் பலதடவைகள் ஏற்பட்டும் சென்றுவிடாமல் எனது கொள்கைகளுக்காகவும் இலட்சியத்திற்காகவும் எமது மக்களின் துயரங்களை கண்ணுற்று அவர்களில் ஒருத்தியாக இருந்து துன்பங்களை அனுபவிப்போம் என நினைத்து எம் மண்ணிலேயே வாழ்ந்துவரும் நான் உங்களிடம் விடுக்கும் வேண்டுகோள்.

புலம்பெயர் தமிழர்களே, உதவும் கரங்களே, புத்தி ஜீவிகளே எம் இனத்திற்காக குரல் கொடுங்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்களுக்கும் அரவணைக்க நீங்கள் இருக்கிறீர்கள் என்ற புதுநம்பிக்கை அவர்களுக்கு உருவாகட்டும்.

அவர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத்தை மேற்கொள்ளக் கூடிய வகையில் பல உதவும் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தொழிற்சாலைகளை நிறுவி பாதுகாப்பான சூழலுடன் தன்மானத்துடன் சொந்தக்காலில் நிற்கக்கூடிய வகையில் கௌரவமான வேலைவாய்ப்பை அவர்களுக்கு வழங்கி உங்கள் பணத்தையும் பெருக்கிக் கொள்ளுங்கள். **முன்னாள் ஆண் பெண் போராளிகளை கௌரவத்துடன் வேலை செய்யக்கூடிய வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள்.**


**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்கு உதவுங்கள். ஆறு வருடங்களுக்கு முன்னர் சென்று பழைய வாழ்வை மீட்டிப் பாருங்கள். எம் தலைவனின் நிர்வாகக் கட்டமைப்புக்களை** எண்ணிப் பாருங்கள். புலம்பெயர் உறவுகளிடமிருந்து உதவியாகப் பெற்ற பணத்தில் எமது மக்களுக்காக அவர் ஆற்றிய சேவைகள் உன்னதமானது.

உங்களில் பலர் வன்னி மண்ணிற்கு விஜயம் செய்திருப்பீர்கள். அந்த நாட்களை எண்ணிப் பாருங்கள். உங்களிடம் எனது உருக்கமான வேண்டுகோள். மற்றவர்களுக்கு எப்படி எந்த வகையில் உதவ வேண்டும் என்று வழி காட்டிச் சென்றுள்ள எம் தலைவனின் வழியை பின்பற்றுங்கள்.

தற்போதைய ஆட்சி மாற்றம் எமக்கு இதுவரை எந்த தீர்வையும் பெற்றுத்தராவிடினும் தனிப்பட்ட வகையில் எளிமையும் மென்போக்கும் கொண்டவராக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆகவே பயமின்றி மனிதாபிமானத்துடன் பணியாற்ற முன்வாருங்கள் என்பதே என் தயவான வேண்டுகோள். எனக்காக நான் எதனையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. என மக்களுக்கான என் வேண்டுகோளை நிறை வேற்றுங்கள்.

# சுதந்திர இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தியின் சிரார்த்த தினம்



மகாத்மா காந்தியின் 68 ஆவது சிரார்த்ததினம் இன்று.

மகாத்மா காந்தி 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் இரண்டாம் திகதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் "போர்பந்தர்" என்ற நகரில் கரம்சாந்த் காந்தி, புத்திலிபாய் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

காந்தி தனது ஏழு வயதில் பள்ளிப்படிப்பில் ஒரு சுமாரான மாணவனாகவே காணப்பட்டார். காந்தி தனது 13ஆவது வயதில் தம் வயதை ஒத்த கஸ்தூரிபாயை மணந்தார். தனது 16வது வயதில் காந்தி தன் தந்தையை இழந்தார். தனது 18ஆம் வயதில் பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு பரிஸ்டர் எனப்படும் சட்டத்தரணி படிப்பிற்காக காந்தி இங்கிலாந்து சென்றார். தன் படிப்பை வெற்றிகரமாக முடித்து தாயகம் திரும்பிய காந்தி மும்பையில் சிறிது காலம் சட்டத்தரணியாக பணியாற்றினார. தென்னாபிரிக்காவில் தன் தகுதிகேற்ற வேலை ஒன்றுக்கு வெறறிடம் இருப்பதாக அறிந்த காந்தி, 1893 இல்அங்கு பயணமானார.

அச்சமயம் தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சியில் நிறவெறியும் இனப்பாகுபாடும் மிகுந்து இருந்தது. அதுவரை அரசியல் ஈடுபாடில்லாது தன்னையும் தன் குடும்பத்தையும் மட்டுமே கவனித்து வந்த இளைஞராயிருந்தார் காந்தி. தென்னாபிரிக்காவில் அவருக்கேற்பட்ட அனுபவங்கள், எதிர்காலத்தில் அவரை ஒரு மாபெரும் அரசியல் சக்தியாக உருவாக்க உதவியது.

பிரிட்டோரியா செல்வதற்காக தகுந்த பயணச்சீட்டுடன் புகையிரத முதல் வகுப்புப் பெட்டியில்பயணம்செய்த காந்தி, அவர் ஒரு வெள்ளையர் இல்லை என்ற காரணத்திற்காக, ஆங்கிலேய அதிகாரி ஒருவரால் புகையிரதநிலையத்தில் பெட்டியிலிருந்து வெளியேறறப்பட்டார். வெள்ளையர அல்லாத ஒரே காரணத்தால் இது போன்று பல இன்னல்களை காந்தி அனுபவித்தார். இதன் மூலம் தென் னாபிரிக்காவின கறுப்பின மக்களும் அங்கே குடியேறிய இந்தியர்களும் படும் இன்னல்களை காந்தி நன்குணர்ந்தார்.

1894 ஆம் ஆண்டு நேடல இந்திய காங்கிரஸ் என்ற பெயரில்கட்சி தொடங்கி அதற்கு அவரே பொறுப்பாளரானார். இதன் மூலம் நேடல் மாகாணததிலிருந்த இந்தியர அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களை தங்கள் உரிமைககாக குரலெழுப்ப ஊக்கப்படுத்தினார.

1906 ஆம ஆண்டு ஜோகர்னஸ்பேக் நகரில் நடந்த ஒரு போராட்டத்தில் முதன் முறையாக சத்தியாகிரகம் எனப்படும் அறவழிப் போராட்டத்தை பயன்படுத்தினார். அஹிம்சை, ஒத்துழையாமை, கொடுக்கப்படும் தண்டனையை ஏற்றல் ஆகிய கொள்கைகள் இவ்வறவழிப் போராட்டத்தின் பண்புகளாகும். இந்த காலகட்டத்தில் காந்தியும் அவருடன் சேர்ந்து போராடியோரும் பலமுறை சிறை சென்றனர். தொடக்கத்தில் ஆங்கில அரசாங்கம் இவர்களை எளிதாக அடக்கியது போல் தோன்றியது. பின்னர் பொதுமக்களும் ஆங்கில அரசாங்கமும் இவர்களின் உண்மையான மற்றும் நேர்மையான வாதங்களை புரிந்து கொண்டு இவர்களுடைய கோரிக்கைகளை ஏற்கும் நிலை ஏற்பட்டது.

தென்னாபிரிக்காவில் காந்தி தலைமையேற்று நடததிய போராட்டங்களைப் பற்றி இந்திய மக்கள் அறிந்திருந்தனர். காந்திக்கு, கோபால கிருஷ்ண கோகலே, ரவீந்திரநாத் தாகூர் போன்றோருடன் நட்பு ஏற்பட்டது. காந்தி இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் முழு வீச்சில் ஈடுபட்டார்.

1921 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1930 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆங்கிலேய அரசு, இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கப்படும் உப்புக்கு வரி விதித்தது. இதை விலக்கிக் கொள்ளுமாறு காந்தி பிரிட்டிஷ்காரரிடம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. சத்தியாகிரக முறையில் இதை எதிர்க்க முடிவெடுத்த காந்தி 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி அன்று 78 சத்தியாகிரகிகளுடன் நடை பயணத்தை தொடக்கினார். 23 நாட்கள் நடை பயணத்திற்குப் பிறகு, கடல் நீரை காய்ச்சி உப்பு தயாரித்து பிரிட்டிஷ் சட்டத்திற்கு எதிராக பகிரங்கமாக பொதுமக்களுக்கு விநியோகித்தார்.. மேலும் இந்தியாவில் கடலோரத்தில் இருந்த அனைத்து இந்தியர்களையும் இது போல் உப்பு தயாரித்து பயன்படுத்தச் சொனனார். இந்தியாவின் பல இடங்களில் இது போல் நடந்தது. காந்தி உட்பட பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள்சிறையிலடைக்கப்பட்டனர்.

வேறு வழியில்லாமல் பிரிட்டிஷ் அரசாங்கம் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதியில் வரியை நீக்கிக் கொண்டது. 1942 ஆம்ஆண்டு நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்திலும் காந்தி பெரும் பங்கு வகித்தார். வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின்போது காந்தி சொன்ன வாக்கியம் "செய்அல்லது செத்து மடி" ஆகும்.

பாகிஸ்தான் பிரிவி னையின் போது இந்துக்களும் முஸ் லிம் களும் மோதிக் கொண்டது அவருக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது.

1945ஆம் ஆண்டில், பாரத நாட்டை இரு துண்டுகளாக, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்ற இருநாடுகளாக பிரிப்பது என்ற யோசனையை பிரிட்டிஷ்காரர் முன்வைத்தனர். அதுதொடர்பான பேச்சுவார்த்தைகளிலும் சமாதான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். மதத்தின் அடிபபடையில் இந்தியாவை துண்டாட முனைந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், அதற்காக மவுன்ட்பேட்டன் திட்டம் என்ற ஒரு திட்டத்தை 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொண்டு வந்தனர். இதற்கு காந்திஜி எதிர்ப்பு தெரிவித்தார். இந்நிலையில், இந்த இரண்டு மதத்தினரும் நாட்டின் பல நகரங்களில் மோதிக கொண்டதில் ஏராளமானோர இறந்தனர். இது, காந்திஜிக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. கொல்கத்தா மற்றும் டில்லியில் நடந்த மதக் கலவரங்களைக் கண்டித்தும், மக்கள் அமைதி வழிக்குத் திரும்ப வேண்டும் என வலியுறுத்தியும காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கினார.

விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில், விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப பேச்சுவார்த்தையின் படி பாகிஸ்தான் தனி நாடாக வேண்டும் என்டதில் கராச்சியை சேர்ந்த முகம்மது அலி ஜின்னா மிகவும பிடிவாதமாக இருந்தார். ஐதராபாத்தை சேர்ந்த ஜவஹர்லால் நேருவின் மிக நெருங்கிய நண்பரான ஜாகிர் ஹுசைன் பாகிஸ்தான் பிரிபபாத பாரதமாக விளங்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தார். பாகிஸ்தானின் முகம்மது அலிஜின்னாவும் இந்தியாவின் ஜாகிர் ஹுசை னும் கருத்து மோதல்களில் கடும் சொற்போரில் ஈடுபட்டனர். பாகிஸ்தான் தனிநாடாக பிரிவதை காந்தி , ஜவஹர்லால் நேரு, ஜாகிர் ஹுசைன் போன்றோர் விரும்பவில் லை. பாகிஸ்தான் பிரிவினையை கொண்டு வந்த பிரிட்டிஷ்காரருக்கு பாகிஸ்தானை பிரிப்பதா? இல்லையா? என்ற ஒரு பிரச்சினை ஏற்பட்டது. பிரிட்டிஷ்காரருக்கும் காந்தி, ஜவஹர்லால் நேரு, முகம்மது அலி ஜின்னா, ஜாகிர் ஹுசைன் உட்பட்ட முக்கியஸ்தர்களுக்கும் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றது. பிரிட்டிஷ்காரரிடம் ஒவ்வொருவரும் தங்கள‌து கருத்துக்களை கூறியிருந்த போதிலும் மகாத்மா காந்தியின் கருத்தையே ஏற்றனர். பாகிஸ்தான் பிரிபடுவதை விரும்பாத மகாத்மா காந்தி நேர்மையுடன் பாகிஸ்தானை தனி நாடாக ஆக்குவதற்கு பிரிட்டிஷகாரரிடம் ஆலோசனைகூறினார் மகாத்மா காந்தி ஒருகணம் நேர்மை தவறின் பாகிஸ்தான் எனும் நாடு உதயமாகி இருக்காது. இந்தியாவின் ஒரு மிகப்பெரிய மாநிலமாக இருந்திருக்கும்.

பாரதநாடு இந்தியா - பாகிஸ்தான் என்று இரு வேறு நாடுகளாக கூறுபோடப்பட்டபோது உருவான மதக் கலவரத்தை இராணுவத்தாலோ, பொலிஸாரினாலோ அடக்க முடியவில்லை. ஆனால் மகாத் மாவின் உண்ணா நோன்பு வாயிலாக விடுத்த அமைதி செய்தி இரத்த வெறியில் திளைத்த மக்களின் உணர்வுகளை சமாதானத்தை நோக்கி தட்டி எழுப்பியது. தனது சாத்வீக போராட்டத்தை விடுதலைக்கான ஆயுதமாக மட்டுமே காந்தி பயன்படுத்தி நிறுத்திக் கொள்ளவில்லை. பிரிவினையை மகாத்மா காந்தி ஒப்புகொளளவில்லை. ஆனால் பிரிவினையை ஏற்றுக் கொணடவர்களை அதற்குரிய நியாயமான நடைமுறைகளை தனது சாதவீக போராட்டத்தின் மூலம் ஏறறுக்கொள்ளச்செய்தார்மகாத்மா.

பாகிஸ்தானுக்கு வழங்க வேண்டிய 55 கோடி ரூபாவை பிரதமர் ஜவஹர்லால் நேருதலைமையிலான அமைச்சரவை கொடுக்க மறுத்த போது, மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கி அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தமை ஆகிய விடயங்கள் இந்துக்களுக்கு வெறுப்பாக அமைந்தது. எனவே, இந்துத்துவா தீவிரவாதிகள் மகாத்மா காந்தி முஸ்லிம்களுக்கு ஆதரவு கொடுத்தது போதும் காந்தியை விட்டு வைத்தால் ஜம்மு-காஷ்மீரை பாகிஸ்தானிடம் தாரை வார்த்து விடுவார் எனக் கருதியதனால் நன்கு திட்டமிட்டு 30-01-1948 இல் சுட்டுக கொன்றனர் என சர்வதேச அரசியல அவதானிகள் கருதுகின்றனர.

இது போன்ற பல போராட்டங்களின் முடிவில் 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15 ஆம் திகதி இந்தியா சுதந்திர நாடாக மலர்ந்தது. 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி பாகிஸ்தான் சுதந்திர நாடாக மலர்ந்தது. இந்தியாவுக்கு வெளியே முதன முதலில் 1961 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி காந்தி தபால்தலையை வெளியிட்ட நாடு தன் வாழ்நாளில் மிதிக்காத நாபான அமெரிக்கா ஆகும. அவரின 28,835 நாட்களில் 2,338 நாட்கள் சிறையில் கழித்தார்.

காந்திக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை!. காந்தியின் ஒவ்வொரு நடவடிக்கையும் இந்துக்களுக்கும், இந்தியாவிற்கும் எதிரானதாகவும், முஸ்லிம்களுக்கு ஆதரவானதாகவும் இருப்பதாகவே கருதிய இந்துமத தீவிரவாதிகள் காந்தியை சுட்டுக்கொன்றனர். இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தியதன் காரணமாக மகாத்மா காந்தி "சுதந்திர இந்தியாவின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

அல்ஹாஜ் எம். எப். எம். இக்பால்
யாழ்ப்பாணம்.

# செய்தித் துளிகள்

## ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை

கோண்டாவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திருமதி. வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் மற்றும் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி மீனா செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் ,மக்கள் வங்கி யாழ். கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி றஜனி விஜயலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5)

## நற்கருணை விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழாவின் நற்கருணை விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வருடாந்த திருவிழாவும் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் திருநாள் திருப்பலி,நற்கருணை விழா என்பன நடைபெறவுள்ளன.(இ-5)

## சுவாமி விவேகானந்தரின் 154 ஆவது ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்உரும்பிராய் சந்தி மருதனார்மடம் பகுதியில் அமைந்துள்ள இராம கிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் சுவாமி விவேகானந்தரின்154ஆவது ஜெயந்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சைவசித்தாந்தம் முதுதத்துவமாணி வ.ஆ.தங்கமயில் வழங்கும் "இராமகிருஷ்ணமிஷன்காட்டும்ஆன்மீகப் பாதை" என்ற தலைப்பிலான ஆன்மீக உரையும், பஜனை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. உரும்பிராய் மேற்கு கிராமசேவையாளர் க.செல்வச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## பொதுக்கூட்டம் நாளை

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சன சமூக நிலையத்தின்வருடாந்தபொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு கந்தமுருகேசனார் மாதிரிப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக் கூட்டத்திற்கு நிலைய அங்கத்துவ உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5-60)

## அமரர் எம்.சி.சுப்பிரமணியத்தின் 27வது ஞாபகார்த்ததினம் நாளை

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை நடத்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலைவருமான அமரர் எம்.சி.சுப்பிரமணியத்தின் 27வது ஞாபகார்த்த தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பலாலிவீதியில்அமைந்துள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் முற்பகல் 10மணிக்குநடைபெறவுள்ளது.

மகாசபையின் தலைவர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆணின் சடலம் மீட்பு

கல்முனை பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் 44 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கல்லாறு காளி கோயில் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட தம்பிராசா வரதரதசன் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனியார் பேருந்துகளில் நடத்துநராகவும். மற்றும்கடைகளிலும்தொழில் புரிந்து வருபவர் எனவும், தொடர்ந்து அதிகளவாக மது அருந்துபவர்எனவும்பேருந்து தரிப்பு நிலையத்திலுள்ளவர்கள் தெரிவித்தனர்.(இ)

## ரயில் மோதி ரயில் கடவை ஊழியர் பலி!

கம்பஹா ரயில் கடவையில், கடமையில் ஈடுபட் டிருந்த ஊழியர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம்மாலை பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் பெம்முல்ல ரயில் பாதையின் மேற்பார்வை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பெம்முல்ல ரயில் கடவையில் காவலாளியாக கடமையாற்றிய அத்தனகல்ல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே ரயில் மோதுண்டு உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. (இ)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2016~12.02.2016

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**ஆனந்த வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக் கொள்ளும் நேரம்! நட்பு வட்டமும் உறவினர் வட்டமும் நாளும் உயர வேண்டும் என்று விரும்பும் தனுசு இராசி நேயர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் 10 ஆம் இடத்தில் பரிவர்த்தனை பெற்றிருப்பது யோகம் தான். தொழில், உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சக

## ஆனந்த வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக்கொள்ளும் நேரம்!

பணியாளர்களின் ஒத்துழைப்போடு தக்க விதத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பகல் இரவாக பாடு பட்டதற்கேற்ற பலன் இப்பொழுது கிடைக்கும். பழைய கடன்கள் வசூலாகும். உறவினர்கள் பகை மாறி உதவிகரம் நீட்ட முன்வருவர்.

மகன் அல்லது மகள் வழியில் நல்ல காரியம் நடைபெறும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிகளில் குணம் மாறிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்திணைந்து செயற்படுவதாக வாக்குறுதி கொடுப்பர். ஆற்றல் உங்களுக்குள் இருந்தாலும் அதை பிரகாசிக்க வைக்க குருவின் அருள் உங்களுக்கும் தேவை.

குரு பகவான் உங்கள் ராசிநாதனாக விளங்குவதால் உங்களோடு இணைந்து செயற்பட்டவர்கள், உங்களை மறக்க மாட்டார்கள். நெஞ்சத்தில் நீங்காத நினைவலைகளை பதித்து வைப்பவர்கள் நீங்கள. உங்களுக்கு இந்த மாதத்தில் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதிர்பாராத விரயம் வந்து சேரலாம். எனவே, இல்லம் வாங்கி குடியேறுவது முதல் இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவது வரை ஏதேனும் ஒரு சுபவிரயத்தை செய்தால்தான் நல்லது.

விரய சனியின் கடுமை குறைய ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபாடு செய்வது நல்லது.

பொதுவாக முதல்சுற்று நடப்பவர்கள் கொஞ்சம் கூடுதல் கவனத்தோடு செயறபட வேண்டும். இரண்டாவது சுற்று நடப்பவர்கள் முன் எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது.

விரயாதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் இருப்பதால் விரயத்திற்கேற்ற இலாபம் வந்துசேரும். எனவே காரியத்தை தொடங்கினால் காசு, பணம் கைகளுக்கு வந்து சேரும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ரன் உங்கள் ராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் புதனோடு இணையும் போது புத- சுக்ர யோகம் உருவாகும். இதன் விளைவாக திருமணத்தடை அகலும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் உடன பணிபுரிபவர்களுக்கு வரவேணடிய சலுகை உங்களுக்கு கிடைக்கும். அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பர பொருட்களையும் வாங்கி குடும்ப உறுப்பினர்களை மகிழ்விப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**மகர புதனின் சஞ்சாரம்**

உங்கள் ராசிக்கு 7, 10 இற்கு அதிபதியான புதன், தனஸ்தானத்தில் பெப்ரவரி 6 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். 9 இற்கு அதிபதியோடு 10 இற்கு அதிபதி இணையும்போது தொழில் வளம் மேலோங்கும். கூட்டுத் தொழில் செய்வோர் தனித் தொழில் செய்ய முன்வருவர். உத்தியோகத்திலுள்ளவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக்கொண்டு விரும்பிய தொழில தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். புத ஆதித்ய யோகம் செயற்படும் இந்த நேரம் பொன்னான நேரமாகும்.




**சிம்ம குருவின் சஞ்சாரம்**

பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் குரு சிம்ம ராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கிறார். அப்போது அதன் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப இக்காலத்தில் வாழ்க்கை தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சிப பாதைக்கு நண்பர்களும், உறவினர்களும் ஒத்துழைப்பு செய்வர். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு விற்று இலாபத்தைக் கொடுக்கும். வேலையாட்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். இம்மாதம் பெருமாள் வழிபாடு பெருமையை சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகவே அமையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பர்.

இடமாற்றம், வீடு மாற்றம் எதிர்பார்த்தபடி வந்துசேரும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். சிம்ம குருவின் சஞ்சாரத்தை முன்னிட்டு மாதக் கடைசியில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்க வழி பிறக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்பும், கூடுதல் சம்பளமும் கிடைக்கும். மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.



**அலைச்சல் கொஞ்சம் கூடுதலாகவும் ஆதாயம் சற்று குறைவாகவும் இருக்கும்! நிதானம் ஒன்றே வெற்றிக்கு வித்திடும் என்று சொல்லும் மகர இராசி நேயர்களே!**

தைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சனி, உங்கள் ராசியைப்

## அலைச்சல் கொஞ்சம் கூடுதலாகவும் ஆதாயம் சற்று குறைவாகவும் இருக்கும்!

பார்க்கின்றார். அஷ்டமத்தில் ராகு சஞ்சரிக்க, அஷ்டமாதிபதி சூரியன் உங்கள் ராசியில் சஞ்சரிக்கின்றார். எனவே அலைச்சல் அதிகமாக இருக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைப்பது அரிது. இம் மாதத்தை இனிய மாதமாக அமைதுக்கொள்ள வழிபாட்டில் கவனம செலுத்த வேண்டும்.

இரண்டில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. திரண்ட செலவம் வந்தாலும் அவை அனைத்தும் சீக்கிரமே செலவாகிவிடும். யாருக்கும் வாக்கு கொடுக்க நினைத்தால் கொடுக்கும் முன்பு ஒரு கணம் சிந்திப்பது நல்லது. கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாமல் போகலாம். நாணயப் பாதிப்போடு நடமாடும் சூழ்நிலை உருவாகலாம. அதேநேரத்தில் சனி பார்வைக்கு மகத்துவம் அதிகம் என்பதால், பணிபுரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகலாம். பிணியின் பிடியில் சிக்கித்தவிக்கலாம்.

மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் உடல்நலத்தைச் சீராக்கிக்கொள்ள இயலும். கிரக நிலைகளின் சஞ்சாரம் எதிர்பார்த்த அளவிற்கு நற்பலன்களைக் கொடுக்க இயலாமல் இருப்பதால் அரைகுறையாகப் பல பணிகள் நிற்கும். ஆரம்பித்து வைத்த தொழில்கள் உழைப்பிற்கேற்ற பலனைக் கொடுக்காது. சீராக நடந்து வரும் வாழ்க்கையில் இதுபோன்ற சிரமங்கள் வந்ததில்லையே என்று சொல்லி அங்கலாய்ப்பீர்கள்.

குருவின் சாரபலம் மாறும் பொழுது அதாவது மாதக் கடைசியல் அஷ்டமத்து ராகுவோடு, அஷ்டமத்து குருவும் வரப்போகின்றது. எனவே வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. அந்நிய தேசத்தில் இருப்பவர்கள் தாய் நாடு திரும்பும் சூழ்நிலையும், தாய் நாட்டில் உள்ளவர்கள் அந்நிய தேசம் செல்லும் சூழ்நிலையும் அமையலாம். வரும் மாற்றங்களை சமாளிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ரன் வரும் ஜனவரி 20 ஆம் திகதி தனுசு ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். 5 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் விரயம் ஏற்படும் சூழ்நிலை உண்டு. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வேலை வாய்ப்புக் கிடைத்த குழந்தையாக இருந்தால், அவர்கள் திருமண முயற்சிக்காக செலவிடுவீர்கள். இப்படி சங்கிலித் தொடர்போல குழந்தைகளின் நலன் கருதிச் செலவிடும் நிர்ப்பந்தம் உருவாகும். தொழில் ஸ்தானாதிபதயாகவும் சுக்ரன் விளங்குவதால் பழைய தொழிலைக் கொடுத்துவிட்டுப் புதிய தொழிலை தொடங்கலாமா என்று சிந்திப்பீர்கள். அந்நிய தேசத்திலிருந்து வரும அழைப்புகளை ஏற்றுக்கொள்ள இயலாத சூழ்நிலை உருவாகும். சக பணியாளர்களை அனுசரித்துக் கொண்டு, இருக்கும் இடத்திலேயே நீடித்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

**புத- ஆதித்ய யோகம் செயறபடும் நேரம்!**

பெப்ரவரி 6 ஆம் திகதி 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உங்கள் ராசியில் வந்து சேரப்போகின்றார். அஷ்டமாதிபதி சூரியனோடு புதன் வந்து இணைவதால் சில நல்ல காரியங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறலாம். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வாய்ப்புகள் சிலவற்றை உபயோகப்படுத்திக் கொளவர்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட விவகாரங்கள் அகலும். வழக்குகள் சாதகமாகும். மாற்று இனத்தவர்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவர்.




**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 7 ஆம் திகதி, குரு வக்ரம் பெற்று சிம்மத்திற்கு செல்கிறார். அங்கு சுமார் மூன்றரை மாத காலங்கள் வக்ர இயக்கத்திலேயே இருக்கின்றார். அஷ்டமத்து குரு அலைச்சலையும், அமைதிக் குறைவையும் உருவாக்கலாம். அதன் பார்வை பலத்தால் 12 ஆம் இடம் புனிதமடைவதால் விரயங்கள் சுபவிரயங்கள் ஆகும்.

வீடு மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமையும். பணப் புழக்கம் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடினாலும் சமாளித்து விடுவீர்கள்.

இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் விழிப்புணர்ச்சியோடு செயறபட வேண்டிய மாதமாகும். பக்கத்து வீட்டாரின் பகையை முன்னிட்டு வீடு மாற்றங்கள் உருவாகலாம. தக்க தருணத்தில் உறவினர்கள் உதவிக்கரம் நீட்ட மறுப்பர். தடுமாற்றங்கள் அதிகரிக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் உருவாகலாம். குழந்தை களால் விரயம் கூடும். குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள்.

திசாபுத்திக் கேற்ற தெய்வ வழிபாடும், சர்ப்ப சாந்தி வழிபாடும் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுககும. குரு சிம்மத்தில் சஞ்சரிக்கும போது குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு முடிவெடுத்தால் குழப்பங்கள் ஏற்படாது. (தொடரும்)

தன்னுடன் வேகமாக ஓடி வெற்றி காண போட்டிக் குதிரைகள் இருப்பதால்தான் ஒரு குதிரை வேகமாக ஓடுகிறது. - ஓவிட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசை நம்பி புருசனை கைவிடுதலும் அரசை நம்பி சர்வதேசத்தை கைவிடுதலும்

அரசனை நம்பி புருசனைக் கைவிடல் என்றொரு பழமொழி நம் தமிழ்மொழியில் உண்டு.

அரசன் என்ற சொற்பதம் திரிபடைந்ததால் ஏற்பட்டதாகும்.

உண்மையில் அரசனை என்பது அரசை என்பதாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

முன்னைய காலத்தில் பிள்ளை இல்லாத பெண்கள், அரச மரத்தைப் பலமுறை சுற்றி வந்து வழிபாடு செய்தால் பிள்ளைவரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவ்வாறானதொரு நடைமுறையைப் பின்பற்றி வந்தனர்.

அரச மரத்தைச் சுற்றி வந்தால் பிள்ளைவரம் கிடைக்கும் என்று நம்பி புருசனைக் கைவிட்டு விடாதீர்கள்.

அரச மரத்தை சுற்றுவதோடு புருசனையும் கைவிடாமல் இருக்க வேண்டும் என்பது அந்தப் பழமொழியின் தத்துவம்.

ஆக, அரச மரத்தை மட்டும் நம்பி, கட்டிய புருசனைக் கைவிட்டால் எல்லாம் அம்போதான் என்பதை விளக்குவதற்காக இப்பழமொழி நம் தமிழ் மொழியில் இடம்பெற்றுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, எங்கள் இனப்பிரச்சினை தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட பழமொழியை நாம் ஒப்பிட்டு நோக்குதல் பொருத்துடையதாகும்.

அதாவது எங்களின் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசாங்கம் தானாக முன்வந்து ஒரு போதும் தந்துவிடப்போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

அப்படியானதொரு சூழ்நிலைக்கு சிங்கள அரசியல் தலைவர்களும் சிங்கள மக்களும் இன்னும் தயாராகவில்லை.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

அதாவது சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது செலுத்துகின்ற அழுத்தமே தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுத் தரக்கூடியது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவர் இரா.சம்பந்தனும் இலங்கை அரசுடன் நெருங்கி–ஒற்றுமைப்பட்டு–இணங்கிப்போவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்ட முடியும் என நம்பியுளர்.

இந்த நம்பிக்கை, பிள்ளைவரம் கிடைக்கும் என்று நம்பி அரச மரத்தைச் சுற்றி வருவதற்கு ஒப்பானதாகும்.

இங்கு அரசாங்கத்தை நம்புவது தவறு என்று கூறுவது நம் நோக்கமல்ல. அரசாங்கத்தை நம்புவதென்பது அரசின் செயற்பாட்டில் இருந்து ஏற்பட வேண்டும் என்பதே நம் தாழ்மையான கருத்து.

மாறாக, கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய ஒரு சிலரை தமக்குச் சார்பாக்கிக் கொண்டு அவர்கள் மூலமாக அரசாங்கத்தை நம்ப வைத்து சர்வதேசத்தை கைவிடுகின்ற அளவில் நிலைமையை மாற்றி அமைக்கின்ற அரசாங்கத்தின் செயற்பாட்டை சூழ்ச்சி என்றுணராமல், நல்லாட்சி என்று நினைத்தால் வில்லங்கத்தை நாமே விலைக்கு வாங்குவதாக நிலைமை முடியும்.

எனவே சர்வதேசத்தைக் கைவிடாமல்; சர்வதேசத்தின் ஒத்துழைப்போடு; அதன் மேற்பார்வையில்; அனுசரணையில்; மத்தியஸ்தத்துடன் தீர்வைக் காணவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கும் போதுதான் எங்கள் இலக்கை அடைய முடியும்.

இதைவிடுத்து தமிழ் மக்களின் வாழ்விடங்களை இன்னமும் விட்டுக் கொடுக்கத் தயங்கும்; தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க விருப்பம் இல்லாமல் இருக்கும்; காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்து விட்டனர் என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிடுகின்ற மனநிலையை உடைய அரசாங்கத்தை நம்பி சர்வதேசத்தை கைவிட்டால், 2016ஆம் ஆண்டில் அல்ல இந்த யுகத்திலும் தமிழருக்குத் தீர்வு கிடையாது என்பதே உண்மை.

## வகுப்புக்களில் பங்கேற்கலாம்

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வாரந்தோறும் நடத்தி வருகின்ற (சின்மய சேதுகாரி) வகுப்புக்களுக்கு ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளுமாறு சின்மயாமிஷன் அறிவித்துள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இவ்வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

முற்றிலும் இலவச அனுமதியுடன் நடைபெற்று வருகின்ற இவ்வகுப்புக்கு 28 வயது தொடக்கம் 40 வயது உள்ளவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

இவ்வகுப்பில் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யாவினால் நடத்தப்படுகின்ற ஸ்ரீமத் பகவத் கீதையின் சாராம்சம் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மோ.சைக்கிள் ஆட்டோ விபத்து பூசகர் படுகாயம்

மோட்டார்சைக்கிள் ஆட்டோ விபத்தில் சிக்கிய பூசகர் படுகாயமடைந்துள்ளார்.

துன்னாலை அல்லையம்பதிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 06 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெறவுள்ளது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சரவணசர்மா ரகுநாதசர்மா (வயது 25) என்ற பூசகரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த பூசகர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-60)

## புலோலி உப தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டும்

(கரணவாய்)

மந்திகையில் உள்ள புலோலி உப தபால் நிலையத்திற்கு நிரந்தர கட்டடத்தை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த தபால் நிலையம் பல காலமாக நிரந்தரக் கட்டடம் இல்லாது இயங்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு நிரந்தரக் கட்டடம் இன்மையால் இத்தபால் நிலையம் இடத்துக்கிடம் மாறி மாறி இயங்கி வருகின்றது.

இதனால் பொதுமக்களுக்கு தபால் சேவைக்கான நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

சாவகச்சேரி வீதியில் மந்திகைப் பகுதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த இத்தபால் நிலையம் பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது.

தற்போது மந்திகை-கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இத்தபால் நிலையத்திற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## தனியார் பேருந்துகளில் இனவாத சுவரொட்டிகள்

### அகற்றுமாறு கெமுனு விஜேரட்ன பணிப்பு

(கொழும்பு)

இனவாதத்தை தூண்டும் வகையிலான சுவரொட்டிகளை அகற்றுவதற்கு பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு வார காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த சுவரொட்டிகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தநிலையில் சட்டப்படி பஸ் உரிமையாளர்கள், இவ்வாறான சுவரொட்டிகளை தமது பஸ்களில் ஒட்டுவதற்கு இடமளிக்கக்கூடாது என்று கெமுனு கோரியுள்ளார்.

ஏற்கெனவே கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் பொதுத்தேர்தலின் போதும் அரசியல் சுவரொட்டிகளை பஸ்களில் ஒட்டுவதற்கு இடமளிக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் தனியார் பஸ்களில் சகல இனத்த வரும் பயணம் செய்யும் போது அவர்களுக்கு இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய சுவரொட்டிகளுக்கு இடம்தர முடியாது என்றும் கெமுனு தெரிவித்துள்ளார். (செ-12)

## கைதான நபரிடம் செய்மதித் தொலைபேசி

வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 21 வயதுடைய ஒருவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீதியில் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கைது செய்யப்படும்போது முகத்தை மூடிய வித்தியாசமான தலைக்கவசம் மற்றும் செய்மதித் தொழில்நுட்பத்தில் இயங்கும் தொலைபேசி என்பவற்றை உடைமையில் வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

தடுப்பிலுள்ள சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## விண்ணப்பங்கள் கோரல்

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பத் தரம் III இன் அலுவலர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி மற்றும் ஏனைய தகைமைகள: சிங்கள/தமிழ்/ ஆங்கிலமொழி/ கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

விஞ்ஞானம்/ கணிதம் பாடத்துறைக்குரிய 3 பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரு அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமைகள்: மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் பகுதி I வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

தொழிற்றுறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில்சார் ஆற்றல் (NVQ) மட்டம் 6 தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிட மிருந்து விபரம் அறிந்து கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம் நிலைக் கல்வி மறறும்தொழில்சார்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழிற் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை 2016.02.17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 1952ஆம் இலக்க 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடவும். (இ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் பொன்.சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவுகள் வரலாற்றுப்பிரசித்தி பெற்ற மாத்தறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாவில் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பெருந்திரு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதனை அடுத்து மறுநாள் முதலாம் திகதி திங்கட்கிழமையும் அதற்கு மறுநாள் செவ்வாய்க்கிழமையும் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து நம் நாட்டு பேச்சாளர்கள் மற்றும் தமிழ் நாட்டு பேச்சாளர்களது விசேட சொற்பொழிவுகளும் இடம் பெறும். (இ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இல.361, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டி.எம்.ஐ கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையேயான கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் சமூக ஒப்பந்தமாக அரசியலமைப்பு திட்டம் என்னும் தொனிப்பொருளில் இக்கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. (இ-5)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சிக் கிழக்கு அபிவிருத்தி அமைப்பின் விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தாழையடி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்திற்கு வடமராட்சிக்கிழக்கில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களின் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஏதாவது மதிப்புள்ள ஒன்று வாழ்க்கையில் இருக்குமா னால் அது அன்பு மட்டுமே. எல்லையற்ற, ஆழம் காணமுடியாத, வானம் போல் பரந்த, கடல்போல் ஆழம் கொண்ட அன்பு மட்டுமே. வாழ்க்கையிலுள்ள ஒரே மாபெரும் இலாபம் இது மட்டும்தான். இதை அடைந்த வன் பேறு பெற்றவன்.


வீரம்தான் மேலைநாடுகளுக்கு எனது செய்தி. என் நாட்டு அருமை மக்களே. இன்னும் அதிக வீரம் என்பதுதான் உங்களுக்கு எனது செய்தி.

உனது செல்வம் கடவுளுடையது. நீ அதற்குப் பாதுகாப்பாளன் மட்டுமே என்று கொள். பணத்தில் பற்றுக் கொள்ளாதே.

அனைத்தையும் ஒரு வேள்வியாக, இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய். உலகில் வாழு. ஆனால் அதில் ஒட்டிக்கொள்ளாதே. தாமரையின் வேர் சேற்றில் உள்ளது. அதன் இலையே எப்போதும் தூய்மையாக இருக்கிறது. பிறர் உனக்கு என்ன செய்தாலும் சரி உன் அன்பு எல்லோர் மீதும்பரவட்டும்.

தனக்குத் தானே நோய் தீர்க்கும் திறன் உடலுக்கு உண்டு. மனனப்பயிற்சி, மருந்து, உடற்பயிற்சி போன்றவை அதனைத் தூண்ட வல்லவை.

# ஜாம்பவான்கள் விளையாடும் மாஸ்டர் சம்பியன்ஸ்லீக் சங்கா அதிரடியில் ஜெமினி அரேபியன்ஸ் வெற்றி






ஓய்வு பெற்ற கிரிக்கெட் ஜாம் பவான்கள் விளையாடும் மாஸ்டர் சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஜெமினி அரேபியன்ஸ், லிப்ரா லெஜண்ட்ஸ் ஆகிய அணிகள் மோதின.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நேற்று ஆரம்பித்த இந்த போட்டி யில், ஷேவாக் தலைமையிலான ஜெமினி அரேபியன்ஸ் அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில், கலிஸ் தலைமையிலான லிப்ரா லெஜ ண்ட்ஸ் அணியை வீழ்த்தியது.

234 ஓட்டங்கள் குவித்த அரே பியன்ஸ் அணி சார்பாக சங்கக்கார 86 ஓட்டங்களும், ரிச்சர்ட் லெவி 62 ஓட்டங்களும் எடுத்தனர்.

அணித்தலைவர் ஷேவாக் 21 ஓட்டங்கள் எடுத்தார், லிப்ரா அணி 156 ஓட்டங்கள் எடுத்து தோல்வி யுற்றது. லிப்ரா அணி சார்பில் அதிகபட்சமாக ரியான் 53 ஓட்ட ங்கள், டிம் அம்ப்ரோஸ் 30 ஓட்ட ங்கள் எடுத்தனர்.

அரேபியன் அணியின் சார்பாக விளையாடிய சங்கக்கார ஆரம்ப ஆட்டத்தி லேயே அதிரடி 86 ஓட் டங்களைக் குவித்து ஆட்டநாயகன் விருதனையும் தட்டிச் சென்றுள் ளார். (க)

## கிளிநொச்சி மாவட்டமட்ட சதுரங்க சுற்றுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தால் இன்று மற்றும் நாளை 30, 31 ஆம் திகதிகளில் மாவட்ட மட்டத்திலான சதுரங்க சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத் தில்நடைபெறவுள்ள இப்போட்டியானது 14 பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

9வயது, 11வயது, 13வயது, 15வயது, 17வயது, 19 வயது மற்றும் 19 வயதிற்கு மேற்பட்டோர் என்ற வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் என தனித்தனிப் பிரிவுகளாக இப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெற்றி பெறுபவர்களுக்கு பணப் பரிசில்களும், பதக்கங்களும், வெற் றிக்கிண்ணங்களும், வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள் ளன. 9வயது, 11வயது பிரிவுகளில்முத லாம் இடம் பெறுபவருக்கு 2500 ரூபாவும் 2ஆம் இடம்பெறுப வரு க்கு 1500 ரூபாவும், 3ஆம் இடம் பெறுபவருக்கு 1000 ரூபா பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (க)

## தேசிய விளையாட்டை முன்னிட்டு நகருக்கு குறுக்கான ஓட்டம்

42ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான நகரு க்கு குறுக்கான ஓட்டத்தில் யாழ். மாவட்ட மட்ட ஓட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை தொண்டை மானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


ஆண்களுக்கான ஓட்டம் 12 கிலோமீற்றர் தூரம் உடையதாக வும், பெண்களுக்கான ஓட்டம் 8 கிலோமீற்றர் தூரம் உடையதா கவும் இடம்பெறவுள்ளன. குறித்த போட்டியில் ஆண்கள் பிரிவில் 10 பேரும் பெண்கள் பிரிவில் 6 பேரும் பங்குப்பற்றமுடியும் எனவும் பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்களது பிரதேச செயலக விளை யாட்டு உத்தியோகஸ்தர்களிடம் தொட ர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் தெரிவித்துள்ளார்.(க)

## விளையாட்டு கழகங்களுடனான கலந்துரையாடல்

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர் அல்லது செயலாளருட னான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இக் கலந்துரையாடலில் பிரதேச விளையாட்டு விழா -2016, விளை யாட்டுக் கழக அபிவிருத்தி வேலைத் திட்டம் -2016, கழகங்களின் பதிவு அல்லது மீள்பதிவு என்பன தொடர் பாக கலந்துரையாடப்படவுள் ளது.


எனவே மேற்குறித்த கலந் துரையாடலுக்கு விளையாட்டுக் கழக தலைவர் அல்லது செயலாளர் உரிய நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிர தேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித் துள்ளார். (க-5)





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்திய 6 ஆவது வர்ண இரவு நிகழ்வு அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி கலை யரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய ரீதியில் 9 பதக்கங்கள் பெற்று வெற்றி பெற்ற சென்ஜோன்ஸ் கல்லூரி கராத்தே அணி யினருடன் வடக்கு மாகாண விளையாட்டுத்துறை செயலாளர் இ.ரவீந் திரன், வடமாகாண விளை யாட்டுத்துறை இணைப்பாளர் இ.ஆனல்ட், வடமாகாண உடற்கல்விப் பணிப்பாளர் J. சத்தியபாலன் மற்றும் பொறுப்பாசிரியர் நிஷான், கராத்தே ஆசிரியர் சென்சே S. விஜயராஜை யும் வீரர்கள் கராத்தே கலையினை மேடையில் செய்வதையும் படத்தில் காணலாம்.







புங்குடுதீவு சிறி சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும் மங்கள விளக்கேற்றப்படுவதையும் வெற்றி பெற்ற இல்லம் வெற்றி கேடயத்தினை பெறுவதையும் படத்தில் காணலாம்.

# மீசாலை விபத்தில் பெண்ணொருவர் பலி

சாவகச்சேரி, மீசாலை ஏ9 வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

மீசாலைச் சந்தியிலுள்ள மஞ்சள் கோட்டுக் கடவையை குறித்த பெண் கடக்க முற்பட்டபோது வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த சின்னையா வள்ளிப்பிள்ளை (வயது 62) என்ற குடும்பப் பெண் ஆவார். விபத்தை அடுத்து மோட்டார் சைக்கிள் சாரதி தப்பி ஓடியுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச் சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-12)

# ரூபா 96 இலட்சம் பெறுமதியான வல்லப்பட்டைகள் மீட்கப்பட்டன

## நபர் ஒருவரும் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் நாட்டில் இருந்து வல்லப்பட்டைகளை கடத்திச் செல்ல முற்பட்ட நபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 02.55 மணியளவில் டுபாய் நோக்கி புறப்பட இருந்த சந்தர்ப்பத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகளினால் அவருடைய பயணப் பொதி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது 32 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி ரூபாய் 96 இலட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படல்லகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவருக்கு 01 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், கைபற்றப்பட வல்லப்பட்டைகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. (செ-12)

# விளக்கமறியலில் தமிழக மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழக மீனவர்களை அடுத்தமாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் மொஹமட் ரியாஸ் உத்தரவிட்டுள்ளார்.


புதுக்கோட்டையை சேர்ந்த மூன்று மீனவர்கள் நேற்று இரண்டாவது முறையாக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தெரிவித்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கெனவே விளக்கமறியலில் இருந்த இம் மீனவர்கள் நேற்று மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)







யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று தொடக்கம் 3 நாட்கள் வரை யாழ்.மாநகர சபை மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாளை 31ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் இந்தியா மற்றும் இலங்கை கைத்தொழில் சேவைகள் தொடர்பான சுமார் 300 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன. நேற்று மாலை 5 மணியளவில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்படி வர்த்தக கண்காசியியை நேரில் வருகை தந்து பார்வையிட்டதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நிறை நிறுக்கும் கருவியில் தனது நிறையை நிறுத்துக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

# அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும்.

(கொழும்பு)

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் 20 வீதத்தை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 20 வீத கொடுப்பனவு அடுத்த மாதம் முதல் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படவுள்ளது. கடந்த காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்த தொகையிலிருந்து 20 வீதத்தை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கவுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜீ.தடல்லகே தெரிவித்தார்.

இதன் பிரகாரம் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கு அரச நிர்வாக அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (செ-12)

# தமிழ் மக்கள்...

கலந்து கொள்ளுமாறும் பேரவையின் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (செ)

# தனியார் சொகுசு பேருந்து உழவு இயந்திரத்துடன் விபத்து

## குடும்பஸ்தர் பலி






பூநகரி-சங்குப்பிட்டி அருகாமையில் உள்ள கேரதீவுப் பகுதியில் தனியார் சொகுசு பேருந்து ஒன்றும் உழவு இயந்திரமும் நேற்றிரவு 10 மணியளவில் விபத்துக்குள்ளாகியதில் உழவு இயந்திரத்தின் சாரதி சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியாகி உள்ளார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கி வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்தை யாழிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் சொகுசு பேருந்து கேரதீவுப் பகுதியில் முந்துவதற்கு முற்பட்ட வேளையே விபத்துக்குள்ளானதாக தெரிய வருகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த உழவு இயந்திர சாரதி பூநகரி செம்மன்குன்றைச்சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சிதம்பரப்பிள்ளை கந்தசாமி (வயது 49) எனத் தெரிய வருகின்றது. உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசுப்பேருந்து வழி அனுமதிப்பத்திரம் இல்லாமலே சேவையில் ஈடுப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# ஞானசார தேரருடன்...

அந்த அமைப்பின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலரும் குறித்த விடயம் தொடர்பில் தேரருடன் கலந்துரையாடியிருந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் நீதிமன்ற அவமதிப்புக்காக ஞானசார தேரர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஹோமாகம நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு கடிதமொன்றை எழுதியிருந்ததாக குறிப்பிட்ட அவர் அந்த கடிதத்தினை ஊடகங்களுக்கு வாசித்தும் காட்டியுள்ளார்.

தான் சிங்கள மக்களுக்காக செயற்படுவதாகவும், சிங்கள மக்களின் உரிமைகளுக்காக முன்னின்று செயற்படுவதாகவும் அதன் காரணமாக தன்னை தீவிரவாதி என தெரிவிப்பதாக ஞானசார தேரர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக டிலாந்த விதானகே சுட்டிக் காட்டினார்.

அத்துடன், தன்னையொரு மதவாதியாகவும், தீவிரவாதியாகவும், சித்தரிப்பதனால் எந்தவொரு பயனுமில்லை என தேரர் அந்த கடிதத்தில் கூறியுள்ளதாக அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இதேவேளை, ஞானசார தேரர் குறித்து நாடாளுமன்றில் பிரதமர் ஆற்றிய உரையை தாம் வன் மையாக கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் தனது உரையில் ஞானசார தேரரை புத்தராஜித மற்றும் சோமாராம ஆகியோருடன் ஒன்றிணைத்து பேசியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எனினும், புத்தராஜித மற்றும் சோமராம ஆகியோர் உருவாகுவதற்கு அப்போதைய அரசாங்கமே காரணம் என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், நல்ல விடயங்களுக்காக செயற்படும் போது தம்மை இனவாதி, மதவாதி, தீவிரவாதி என சித்தரிப்பதை தாம் உள்ளிட்டவர்கள் வன்மையாக கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஞானசார தேரரின் விடுதலையை வலியுறுத்தி இன்று மாலை 4 மணிக்கு கண்டி தலதா மாளிகைக்கு முன்னதாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக டிலாந்த விதானகே மேலும் தெரிவித்தார். (செ-12)

# தமிழ் மக்கள் பேரவை
## Tamil People's Council

**தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட**

## அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு

(Report of the Sub-Committee on Finding a Political Solution to the Natioal Question)

## பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடும் ஆரம்ப நிகழ்வு

தலைமை:
மாண்புமிகு நீதியரசர்
**சி.வி.விக்னேஸ்வரன்**
(வடக்கு மாகாண முதலமைச்சர்,
இணைத் தலைவர் - தமிழ் மக்கள் பேரவை)

**இடம்:** வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்
**காலம்:** 31.01.2016 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:** பிற்பகல் 3.00 மணி

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**ஏற்பாட்டுக் குழு, தமிழ் மக்கள் பேரவை**

## இராணுவத்தினருக்கு எதிரான...

உரையாற்றுகையில், கடந்த காலங்களில் சனல் 4 ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளர்களுக்கு இலங்கைக்குள் பிரவே சிக்கக்கூட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

புதிய அரசாங்கம் பதவியேறற தன் பின்னர் சனல் 4 ஊடக வியலாளர் கெலம் மக்ரே நாட்டிற்கு வருகை தந்தது மாத்திரமல்ல வடக்கு கிழக்கிற்கு விஜயம் மேற் கொண்டு காணொளிகளை பதிவு செய்து புதிய திரைப்பட மொன்றை மனித உரிமைகள் பேரவையில் வெளியிட்டார்.

தற்போது அந்த தொலைக் காட்சியின் தயாரிப்பாளர் ஜோன் ஸ்னோவ் வருகை தந்துள்ளார். சுற்றுலா வீசாவில் நாட்டிற்கு வந்த அவர், தமிழ் மக்கள் மத்தியில் இராணுவத்தினர் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வைராக்கியத்தை ஏற்படுத்தும் வேலைகளை அவர் செய்கிறார்.

மேற்குலக நாடுகள் தங்கள் விருப்பத்திற்கு இணங்க ஆடுவதற்கு இந்த அரசாங்கம் இடமளித்துள்ளது.

ஜோன் ஸ்னோவ் போன்றவர்கள் நாட்டிற்கு வருகைத்தந்து இராணுவம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை பரப்பு வதோடு தமிழ் மக்களின் மனங்களை மாற்றி தனி யான மாநிலத்தை உருவாக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றனர்.

அவர் இராணுவத்திற்கு எதிராக மற்று மொரு திரைப்படத்தை உருவாக்குவதற்கான காணொளிகளை பதிவு செய்துள்ளார் என விமல் வீரவன்ச சாடியுள்ளார். (செ-12)

## விபத்தில் படுகாயமுற்ற...

(வயது 39) என்ற குடும்பப்பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 22ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் தனது மகளையும் தாயையும் ஏற்றிக்கொண்டு உறவினர்களுடைய நிகழ்வு ஒன்றுக்குச் சென்றுவிட்டு தாய்வீட்டுக்கு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியில் தனது 12 வயது மகனையும் ஏற்றிவிட்டு பின்தொடர்ந்து சென்றுள்ளார்.

பஸ் வேகமாக செல்ல இவரும் யானைக் காடென்ற பயத்திலும் பஸ் வண்டியின் பின்னால் மகனையும் கவனிக்கும் வகையிலும் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி சென்றுள்ளார். பஸ் திடீரென ஒரு இடத்தில் நிறுத்தப்பட வேகமாகச் சென்றவர் பஸ்ஸுடன் மோதுண்டு படுகாயமடைந்தார்.

உடனடியாக அவர் மீட்கப்பட்டு பூநகரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமாரினால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (செ-12)

## அரச, தனி...

இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பிரயாணமான தனியார் பேருந்திலுள்ள ஒரு சில பயணிகளை கொடிகாமம் சந்தியில் வைத்து அரச பேருந்தில் ஏற்றியதாலேயே மேற்படி கைகலப்பு ஏற்பட்டதாக பேருந்தில் பிரயாணம் செய்த பிரயாணி ஒருவர் வலம் புரிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

தனியார் பேருந்து நடத்துனரே முதலில் அரச பேருந்து நடத்துனரை தாக்கியதாகவும் அதில் அவரது காதுப்பகுதி பலமாக தாக்கப்பட்டதோடு காதில் இருந்து இரத்தம் வடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் உடனடியாக கொடிகாமம் பொலிஸாருக்கு தெரியப் படுத்தியதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் கை கலப்பில் ஈடுபட்ட அனைவரையும் பொலிஸ் நிலையம் அழைத்து சென்றதோடு காயப்பட்ட அரச பேருந்து நடத்துனரை சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

மேற்படி மோதல் சம்பவத்தினால் இரு பேருந்துகளிலும் பிரயாணம் செய்த சுமார் 25 ற்கும் மேற்பட்ட பயணிகள் உடனடியாக தமது பயணத்தை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஆணைக்குழு முன் மகிந்த...

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுயாதீன தொலைகாட்சி சம்பவம் தொடர்பில் பாரிய ஊழலகளுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம திகதி வெளியிடப்படவுள்ளது. இதற்கமைய, ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு தவறிழைத்தவர்களுக்கு வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஒளிபரப்பபட்ட விளம்பரத்திற்கான கட்டணம் செலுத்தப்படாமை தொடர்பில் கடந்த 8 மாத காலமாக குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்ந்து வாக்கு மூலங்களை பதிவு செய்து வந்தது. இதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் முன்னதாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியங்களை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், நேற்றைய தினம் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பிற்போடப்பட்டமை காரணமாக சாட்சி கோரல் இடம்பெறவில்லை. தற்சமயம் ஆரம்ப கட்ட அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## விசாரணையை...

இந்த விசாரணைகளுக்காக பசில் ராஜபக்ஷவிற்கு நேற்று முன்தினம் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகு மாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த தினத்தில் பசில் ராஜபக்ஷ விசாரணைப் பிரிவின் எதிரில் முன்னிலையாகவில்லை. வேறு பணியொன்றில் ஈடுபட்டிருப்பதனால் தம்மால் விசாரணைகளுக்குவர முடியாது என பசில் ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் மல்வான ஒருதொட்ட மற்றும் மாத்தறை கரையோரப் பகுதி ஆகியனவற்றில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் காணிகள் தொடர்பில் பாரியளவில் முறைகேடுகளும் மோசடிகளும் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பிரிட்டன் நாசகாரி...

போர்க்கப்பல், எரிபொருள் மற்றும் விநியோகத் தேவைகளுக்காகவே கொழும்புத் துறைமுகம் வந்துள்ளது.

பிரித்தானியா மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகள் முன்னேற்றமடைந்து வருவதை, வெளிப்படுத்தும் ஒரு சமிக்ஞையாக இந்தப் போர்க்கப்பலின் வருகை குறிப்பிடப்படுகிறது.

பிரித்தானியாவில் கட்டப்பட்ட ரைப் 45 ரக நாசகாரியான, எச்.எம்.எஸ். டிபென்டர், உலகின் மிக முன்னேற்றகரமான போர்க்கப்பலாகும்.

முதன்மை விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதி, நடுத்தரத் தொலைவு பீரங்கி மற்றும் கடல் நடவடிக்கைகளுக்கான உலங்கு வானூர்தி என்பனவற்றை இந்த நாசகாரி கொண்டுள்ளது. (செ-12)

வீடு வாடகைக்கு உண்டு
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் இணைந்த குளியலறையுடன் பெரிய அனெக்ஸ் வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 9927146
(3441)

UK, Australia, Canada
எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர
Student Visa
With Work Permit & PR

IELTS
அவசியமில்லை
வங்கிக்கடன் வசதி
VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION
SIKARAM
Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004, 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m
(C-3598)

புலமைப் பரிசில் -2016
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
புலமைச் சிட்டு
(நாவலர் வெளியீடு)
பரீட்சை①ல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரியவர்கள்
- க. தனுப்பிரியா -187 (யா/புனித திரேசாள் மகளிர் கல்.அச்சு.)
- ச.நதீஷன் -182 (யா/இந்து ஆரம்ப பாடசாலை)
- மா.தனுஷியன் - 178 (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் வித்தி.)
- வ.திஷானா -178 (யா/புனித ஜோண் பொஸ்கோ)
அடுத்த பரீட்சை - 31-01-2016
- ஞாயிறு தோறும் பரீட்சை.
- விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை.
- வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.
தொடர்புகளுக்கு
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P - 0774598440
(C-3597)

2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC
50/12, Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna.
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.
(C-3595)

காணி/ கடைக் கட்டிடங்கள் விற்பனைக்கு
யாழ்-கண்டி வீதி பரந்தனில் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்தியில் இருந்து 300 யார் தூரத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட காணி/கடைக் கட்டிடங்கள் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் வங்கிக்கடன் பெற்றுக் கொள்ளவிரும்பும் பட்சத்தில் அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்க முடியும்.
தொடர்புகளுக்கு:- K. MURUGAN 0775862551 0112337378 0775272093
(3409)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.